வேளியீடு எண் 424.

உ
சிவமயம்

திருக்கொடிமாடச் செங்குன்றூர்த் திருப்பதிகங்கள்



திருஞானசம்பந்தர்

தருமபுர ஆதீனம்

1958

வெளியீடு எண் 424

உ
குருபாதம்

திருக்கொடிமாடச் செங்குன்றூர்த் திருப்பதிகங்கள்

இஃது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்களது

திருவுளத்தின்படி வெளியிடப்பெற்றது.

எழுதியவர்,

திரு R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள்
தேவார பாடசாலை ஆசிரியர், தருமபுரம்.

தருமபுர ஆதீனம்
1958

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

முன்னுரை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திங்கள்தோறும் வரும் திருநாள் குறித்துத் திருப்பதிகம்பெற்ற சிவத்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப் பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல் போல. இம மாதத்திலும் 15—9—58 திங்கட்கிழமை திருக்கோடிமாடச் சேங்குன்றூர் அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய இவ் வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெறுகின்றது.

அன்பர்கள் யாவரும் பாராயணம்செய்து, பெருமான் திருவருளால் எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

*தலச் சிறப்பு

இத்தலம் கோங்குநாட்டுச் சிவத்தலங்கள் ஏழனுள் நான்காவது திருத்தலம். நாககிரி முதலாய பாம்பு சம்பந்தப்பட்ட பல திருநாமங்களையும் உடையது. பிருங்கி முனிவர் முதலியோர் வழிபட்டு அருளுற்றது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனூர் திருப்பதிகம் பெற்றது. அருணகிரி நாதர் அருளிய திருப்புகழ்களோடு கந்தரலங்காரம் மற்றும் கபிலர் முதலிய பல பெரியோர் அருளிய நூல்கள் பலவும் போற்றும் பெருமையது. தவிர இதனைச் சீர்கெழுசெங்கோடு எனப் பண்டைப் பழந்தமிழும் பேசுகின்றது. தற்போது திருச்செங்கோடு எனும் பெயர்கொண்டே மக்கள் பலரும் வழங்குகின்றனர். விறன்மிண்ட நாயனூர் திருஅவதாரம் செய்த திருத்தலமும் இதுவே.

திருச்செங்கோடு பெயர்க்காரணமும் வரலாறும்

சேம்-சிவந்த, கோடு-குன்றம் மலை, என்பது போருள். பண்டு ஆதிசேடனும் வாயுவும் தம்மில் 'வலிமையர் எவருமிலர் என இறுமாப்புற்றனர். அதனை நிருபித்தற்போருட்டு ஆதிசேடனூர் தனது ஆயிரம் தலைகளாலும் இமயமலைச் சிகரத்தைப் பற்றிக்கோள்வதேன்றும் அதனை நீக்கிவிடுதல் வாயுவின் சேயல் என்றும் ஒருவருக்கோருவர் உறுதி கூறினர், அவ்வகைச் சேயலில் வாயுவின் வேகத்தால் தாக்குண்டு பேயர்ந்த குன்றத்தின் சிகரம் ஒன்று அவ்வகையில் தகர்ந்த ஆதிசேடனூரது தலை ஒன்றில் ஒழுகிய இரத்தத்தில் தோய்வுற்றுச் சிவந்த நிறமுடையதாகி இங்கு

* இவை திருச்செங்கோடு தலவரலாற்றைப் பின்பற்றி எழுதப்பேற்றவை.

வீழ்ந்து இச்செங்குன்றமாகிச் சிவந்த நிறத்துடன் திகழ்கின்றது. ஆதலின் இப்பெயர் எய்தியது. தவிர காமதேனு கோணர்ந்து வந்துஅமைத்தது என்பதும் ஆன்ருேர்கூற்று.

மலைக்காட்சி

சிகரம் சிவலிங்கம்போலும் அமைந்து ஏனையபாகங்கள் பாம்பின் படம்போலக் கீழ்ப்பகுதி அகன்று இரு கூருகி உயர்ந்தும் தென்மேற்குப் பகுதி உடல்போலச் சிறுத்தும் காட்சிக்கினிமையதாகிச் செம்மை வெண்மை பசுமை நிறம் திகழ அம்மையப்பனைப் புறக்காட்சியினுலேயே கண்டார் உணர்ந்து பயனுறும்படி நல்லதோற்றமுடையதாய்த் திகழ்கின்றது.

இத்தலத்து நிகழ்ந்த தெய்வீக அற்புதங்கள்

1. குளிர்சுரம் நீக்கியது :

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் தனது அடியார் கூட்டங்களோடும் இறைவழிபாடுகருதி இத்தலத்து வந்து தங்கி இருந்தார்கள். அதுசமயம் உலகம் எங்கும் பரவிய நளிர்சுரம் மக்கள் பலரையும் உயிர்க்கிறுதிபெற ஆக்கியது. அக்குளிர்சுரநோய் அடியார்களை வருத்தாவண்ணம் திருநீலகண்டத் திருப்பதிகத்தை அருளினுர்கள். அந்நோயும் அந்நாட்டைவிட்டே அகன்ருேடியது. மக்கள் பலரும் மகிழ்ந்தனர். ஏன்? தற்போதுங்கூட சென்ற ஆண்டில் உலகெங்கும்பற்றி வருத்திய இன்புளுவேன்ஸாவைப் போக்க இத்திருப்பதிகத்தை எங்கள் தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சிறுநூலாக அச்சிட்டு உலகிற்கு ஈந்தார்கள். பேற்று முறைப்படிப் பாராயணம் செய்து

பயனுற்ருேர் பல்லோர். ஆதலின் இத்திருநீலகண்டத் திருப்பதிகம் என்றும் அடியர் உள்ளத்தை அகலாதிருந்து இன்னல் எதுவாயினும் நீக்கி அருளுகின்ற ஏற்றம் உடையதாகித் திகழ்கின்றது.

2, பிருங்கிமுனிவர் முக்கால் பெற்றது:

பிருங்கிமுனிவர். இவர். சிவனுரை அன்றி எவரையும் பணியாத கோள்கையர். இங்கு இறைவியைப் பிரியாத இறைவன் வடிவினில் வண்டுருவங்கோண்டு இறைவரது பாகத்தை மட்டும் வழிபட்டனர். அது பற்றி எழுந்த உமையவளின் சினத்துக்கு ஆளாயினர். அதனுல் அம்மை யின் அம்சமாகிய தன் உடலிலுள்ள தசைகள் முதலியன வலிகுன்றிவாடினர். அப்போது நிலேகண்டிரங்கிய இறைவர் தந்த மற்ருெரு காலேப்பெற்று நின்றனர். பின், தன் அறியாமைக்கு வருந்தினர். இறைவியைப் பணிந்து மன்னிப்பு வேண்டிப்பெற்றனர். பின் இறைவியோடு இறைவரைப்பணிந்து இன்புற்றனர்.

3. கல் இடபம் கடலே தின்றது:

சிவப்பிரகாசர் என்பார் ஒருவர். திருவாவடுதுறையி னின்றும் வழிபாடுகருதி இங்கு வந்துற்றனர். இவர் தேய்வீக விளக்கத்தால் பற்பல அற்புதங்களேச் சேய் துள்ளவர் என மக்களிற் பலர் கேள்வியால் அறிந்தனர். அங்ஙனம் அறிந்தாரில் ஒரு சிலர் தங்கள் ஆணவமுனேப் பால் அவ்வகை சேய்தல் இவரிடத்துள்ளது உண்மையா யின், இங்கு இறைதிருமுன் நிருத்தமண்டபத்துள் எங்க ளால் வைக்கப்பெறும் கடலேயை ஆங்குள்ள நந்திதேவர்

எழுந்து உண்ணும்படிச் செய்யவேண்டும் என்றனர். இங்ஙனம் இவர்களது சொற்களைச் சொற்களைச் செவி ஏற்று முன் வந்த பெரியோர் ஒருசிலர், அங்ஙனம் நிகழ்ந்ததாயின் நீவிர் யாதுசெய்வீர் என்றனர். அதுகேட்ட செருக்கு மிக்கார் அவர்கள், யாங்கள் அடிபணிந்து சிவனார்க்கு அடிமையாவோம் என்றனர். அதுகேட்ட சிவப்பிரகாசர், அவர்கள் நினைவு அதுவாயின் அங்ஙனமே ஆகுக ! என்று,

"வில்லார் பொதுச் சபையில் வித்தகா நீயும்முனம்
கல்லானைக்கு இக்கருத்திக் காட்டியஉன் - வல்லாண்மை
கட்டுரையாயின் இந்தக் கல்லேறுஎழீ இக்கடலை
இட்ட இவர் முன்தின்னச் செய்யே' எனவும்

இப்பாடலை அருளினர். உடனே இடபம் எழுந்து கடலையைத் தின்றது. ஆணவப் பேச்சாளர் அனைவரும் தலைகுனிந்து வெட்கினர். அடிபணிந்து நின்று அறியாமைக்கு வருந்தினர். பின் சிவனார்க்கு அடிமையாயினர். கண்டார் யாவரும் அருளைவியந்து போற்றி மகிழ்ந்தனர்.

வேலவன் பயங்கரனை வெருட்டியது ;

பிரதிவாதி பயங்கரன் என்பார் ஒருவர். இவர் புலவர். பாண்டிநாட்டுத் திருக்குருகூரினர். பணக்காரர் பலரையும் புகழ்ந்து பரிசில் பலபெறும் வலிமையர் தம்முன் எதிர்ப்பட்ட புலவர்களை வாதிட்டு வெற்றி கண்டிடும் வெறியர். அவ்வகையில் தருக்கமிக்க ஆண்மையர் இவர். ஒருநாள் தனக்கு எதிராவார் எவரும் இலர் எனும் நினைவோடு இத்தலத்தில் வாழும் புலவன். செங்கோட்டு வேலன் திருவடிக்கன்பன். குணசீலன் என்பார் அவருக்குத் தம் வருகையை அறியும்படி முன் எச்சரிக்கையாக ஒரு

ஓலையை விடுத்தார். ஒரு பல்லக்கில் ஏறி வந்துகொண் டிருந்தார். இங்குற்றுர். எதிரில் நீண்டுயர்ந்து நாகம் போலும் வடிவினதாய் விண்வரை உயர்ந்து தோன்றிய செங்கோடர் திருமலையை நோக்கினுர்.

"சமர முகத் திருச் செங்கோடு சர்ப்ப சயிலமென
அமரிற்படம் விரித்துஆடாதது என்னே"

என இறுமாப்புடன் இக்கவிதையைப் பாடத்தொடங்கினுர். கவிதை பூர்த்திபெறுமல் தம் வாக்குத் தடைப்பட்டமையே கண்டார். ஒருவிதமாக அறிவில் மயக்கம் உண்டாதலையும் உணர்ந்தார். இவர் இவ்வகையிருப்ப, இவர் விடுத்த ஓலைகண்டு அஞ்சிய வேலவற்கு அன்புடைப்புலவன் குண சீலன், இங்கு மலைமிசை முருகன் திருமுன் சென்ருன். ஓலையை அறிவித்தான். விண்ணவர்க் காத்த வேற்படை அண்ணல் அடியனைக் காத்தருளவேண்டும் என்று பன்முறை இறைஞ்சிப் பணிந்தான். திருவடிச் சிந்தனை யோடு அயர்ந்து துயில்கொண்டான். ஒரு புலவன் வடிவில் கனவில் தோன்றிய செங்கோடன், அன்பனே! அச்சம் வேண்டாம். அவனை அஞ்சி அகலும்படி யாம் செய்வோம் என்றருளியமை கண்டான். துயிலகன்று அருள்நினைந்து அகம் குழைந்து ஆடினுன் மனமிக மகிழ்ந்தான். செங்கோடன் முருகனும் அப்போதே அப்புலவர்முன் மாடு மேய்ப்பான்போலத் தோன்றினுர். அஃதாய்ந்திலையே,

"நமரின் குறவள்ளி பங்கன் எழுகரை நாட்டுயர்ந்த
குமரன் திருமருகன் மயில்வாகனம் கோத்துமன்றே"

என்று முன்னம் பயங்கரன் பாடமுடியாதபடி தடைப்பட்ட அப்பாடலைப் பூர்த்திசெய்தார். கண்ட புலவரும் கர்வம் அடங்கியவராகிப் பல்லக்கினின்றும் கீழே குதித்தார்.

இப்பாடலை எமது அறிவும் களிப்பப் பூர்த்திசெய்தீர். நீவிர் யாரோ ? அறிய விரும்புகின்றேன் என்ருர். நானே இத்தலத்துறையும் குணசீலரின் மாணவன். எம்மை அப்புலவர் தகுதியிலன் என்று கழித்தனர் எனக் கூறிய இடையரது சொல்கேட்டு அஞ்சினுர். அவர் கழித்த மாணவர் இவரே இவ்வகையராயின் அவர் எத்தகைமைய ராவார் ; என்று அஞ்சினுர். பல்லக்கைத்திருப்பச்செய்தார். விரைவாங்கதியில் தம் ஊர் நண்ணினுர். குமரப்பெருமானே தனக்காக வந்து இவ்விளையாடலைப் புரிந்தமை அறிந்த குணசீலனும் ஆரா உவகையுள் அழுந்தி அருள்வடிவேலன் அடிகளைப்பன்னி ஆனந்தமுற்ருன்.

மூவர்க்கருளியது :

மூவர், என்பார் இவர் வீமணன். ஒவணன். இரங்கணன் எனும் பெயரினர். இச்செங்கோட்டுக் கடவுள் வழிபாட்டினர், பக்திநெறியிற் சிறந்தவர். பண்புமிக்க சிரேட்டர்கள், ஓர்சமயம் இங்கு ஆலயப் பொருள்களைக் கொள்ளைகொள்ள வந்த வடநாட்டுத் துருக்கர் பலரை எதிர்த்தனர். அவர்களது கூரிய வாட்படைக்கிலக்காகி உயிர்துறந்தனர். இங்குறை இறைவர்முன் தோன்றி அருள்புரிந்திட மீண்டும் உயிர் பெற்றெழுந்தனர். எம்பாற்கொண்ட உம் அன்பும் வீரமும் உறைப்பும் கண்டுவந்தோம். நீவிர் மூவரும் எம் தென்பால் காவலராகியுறைவீர். உம்மை வழிபடுவோர்களைப் பேய் பில்லி சூன்யம் முதலாய வினைகள் பீடியா. பீடித்திருப் பினும் அஞ்சியோடி நீங்கிடும், என அருளியபடி வரம் பல பெற்றனர். தன்னை வந்து வழிபடுவார் யாவரும் நலமெலாம் உற்றுத் திகழ்ந்திடும்படி இன்றும் இவர்கள் அருளைப் புரிவாராகி பரமத்திபாண்டமங்கலம் செல்வழியில் ஒதுப் புறமான ஓரிடத்து ஆலயத்துள் உள்ளனர்.

திருப்பதிகம் அருளியன

முதல் திருப்பதிகம். தலத்தைப்பற்றி: கொந்து, மலர், குலை, மலி தண்பொழில்சூழ் செங்குன்றூர், அந்தணர் வாழ்செங்குன்றூர், மலை ஒத்த மாளிகைசூழ் செங்குன்றூர் கொடிமாடச் செங்குன்றூர்.

பெருமானைப்பற்றி: வெண்ணீறணிந்தோன். கொன்றை யொடு நாகம் ஆமை பன்றிக் கொம்பொடு நூலணிந்த திருமார்பன். கங்கை மதி பாம்பொடு கொன்றையுடன் மத்த மலர் கொத்தலரும் செஞ்சடையோன் பிரமன் மால் அறியாப் பவளத்திரள்வண்ணத் திருவடிவன். செம்பொன் மேனி எம்பெருமான், வெண்டலையிற் பலிகொள்வோன், சூலந்தாங்கு திருக்கையன், உமையொரு பாகம்கொண்ட ஒருவன், நீலகண்டன், அவன் சிவன். கழலை ஏத்தலே நீதியும் பொருளும் ஆகும். ஏத்திடுவோர், தடுமாற்றம், அவலம், வினைகளின் நீங்கி இன்புறுவர்.

2. திருநீலகண்டத் திருப்பதிகம்.

சூலம் மழுவொடு தண்டம் தாங்கு திருக்கையீர், முக்கண் திண்தோள், உடையீர், விண்ணுலகம் போற்றும் புண்ணியா, மறக்கும் மனத்தினை மாற்றினாய். என்னை வற்புறுத்தித் திருவடிக்கு ஆளாக்கினாய், ஆவணம்கொண்டு எம்மை ஆண்ட சடையுடை ஈசா, இருபொழுதும் பூக் கொண்டு மலர்கொண்டு கழலடி போற்றிக் கைத்தொண்டு புரிந்து தொழுது வணங்கிடுவோம் நாங்கள் நின் கழலடியே வந்தடைந்தோம். தீவினை, செய்வினை, திண்ணியவினை, யாவும் எம்மைத் தீண்டப்பெறாததாகுக ! திருநீலகண்டம் துணைநின்று காத்தருள்க !!

* கல்வெட்டுக்கள்

கற்சாசனங்களும் - செப்புப்பட்டயங்களும்

இன்னதெய்வம் என்று விளங்காத கல்வெட்டு

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோராசகேசரிபன்மற்கு யாண்டு பதினுன்காவது, இவ்வாண்டு திருச்செங்கோட்டுத் திருவாதிரைக் கணப்பெருமக்கள் கையில், செங்கோனடிகள் தேவியார் முரிக்காமக்கண்ணூர் ஏகவீரதிவாகர தேவரே சாத்திவைத்த செம்பொன், செட்டாங்கல்லால் இருபதின் கழஞ்சு, இப்போன்னின் பலிசைகோண்டு திருவாதிரை தோறும் திங்களிருபது பிராமணரைச் சந்திராதித்தர்வரை ஊட்டுவதாக. இப்படிக்குத் திருவாதிரைக் கணப்பெருமக்களோம்."

சோழன் பரகேசரிவன்மன் காலத்தது

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மற்குச் செல்லாநின்றயாண்டு இருபத்தியேட்டாவது, இவ்வாண்டு திருச்செங்கோட்டுத் திருமலைமேல் துவாதசிக்கும், திருவதிரை, திருவோணத்துக்கு மாகச் சந்திராதித்தர்வரை ஊட்டுவதாக நாங்கள் வைத்த செம்போன் முக்கழஞ்சு. இப்போன் பலிசை கோண்டு இருகலம் ஊட்டுவோம். மூன்று கணப்பெருமக்கள் ரக்ஷை"

நாகர்குன்றுக்கல்லின் மேற்பக்கமுள்ளது:

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராசகேசரி பன்மற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற யாண்டு பதினுன்காவது,

* இவை திருச்செங்கோடு தலவரலாறு பக்கம் 97 முதல் 104 வரை உள்ளபடி.

இவ்வாண்டு திருச்செங்கோட்டுப் பன்னிரண்டுநாட்டுப் பெரு மக்கள் கையில் இளங்கோனடிகள் தேவியார் மு ......ர் அமுதனூர், திருச்செங்கோட்டு ஆள்வார்க்கு நந்தா விளக் கோன்று எரிப்பதாக வைத்த செம்போன், செட்டாங் கல்லால் பதினைந்து கழஞ்சு. இப்போன்னின் பலிசை கோண்டு சந்திராதித்தர்வரை நந்தாவிளக்கு எரிப்பதாக என்றோம். '

" கோவிராசகேசரிபன்மற்கு யாண்டு பதின்மூன்றுவது திருச்செங்கோட்டுப் பன்னிரண்டுநாட்டு...............மக்கள் கோயிலில் இளங்கோவடிகள் தேவியார் மக்கனூர் திருவேகாதசிக் கணத்துக்குக் கோடுத்த செம்போன் (க) செட்டாங் கல்லால் இருபதின் கழஞ்சு. இப்போன்னின் பலிசை கோண்டு சத்திராதித்தர்வரை யூட்டுவதாக......... திருவேகாதசிக் கணப்பெருமக்களோம். "

" ஸ்வஸ்தி ஸ்ரீ கோப் பரகேசரிபன்மற்குச் செல்லா நின்ற யாண்டு பன்னிரண்டாவது திருச்செங்கோட்டுச் சோணாட்டுப்பெருமக் ....இ ,,...ட்டிலிருக்கும் உத்தமன் கணபதிவைத்த போன் இருபதின்கழஞ்சு. இப்போன்னின் பலிசைகோண்டு இரு ....ந்த நாழிமாழிசி திருமடை நான் மலையில், சிவப்பிராமணர்க்குப் போசனம் சந்திராதித்தர் வரை செய்வதாக என்றோம். சோணாட்டுப்பெருமக்களில் உத்தமன் கணபதி. "

" ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிபன்மராதிய ஸ்ரீராசேந்திர சோழ தேவர்க்கு யாண்டு பதினேட்டாவது திருச்செங் கோட்டுத்தேவர்க்குத் திருப்பள்ளி எழுச்சி, இவ்வாண்டு முதற்கோண்டு சந்திராதித்தர்வரை கோட்டுவதாகக் கோண்டு......தூரா..... வங்கலது இத்தேவர்......உடைய

உவச்சர்........பெருவார்த்தரை........நித்துக்கு இடவழிப்ப ·· ...ழைஞ்சு வார ஒழுக்கு நெல் முக்கால்....... ....மாவும் கொண்டு திருப்பள்ளி எழுச்சிகொண்ட. ....

இக்கல்வேட்டைக் கவனித்தால் இத்தலத்து, முற் காலத்தில், ஆலயங்களில் மேளங்கொட்டும் தொழிலை உவச்சர்கள் என்னும் சாதியார் செய்து வந்ததாகத்தெரி கிறது. உவச்சர்கள் காளிகோயில் பூசகர்கள். இச்சாதி யார் திருநெல்வேலி ஜில்லாவில் பெருங்கூட்டத்தினர், "கம்பர்" என்றபட்டப்பெயர்பெற்று மேளம் வாசிப்பதையே ஜீவனமாகக்கொண்டு வாழ்கின்றனர். எக்காரணத்தால் அச்சாதியார் இத்திருச்செங்கோட்டுச் சந்நிதியினின்றும் மறைந்தனர்களோ! அறியக்கூடவில்லை. இப்பொழுது இக்கோயிலில் மேளம்கொட்டுபவர் வேறோர்வகையினரா யிருக்கின்றனர்.

குமரர்கோயில் வடக்குக் குமுதவரி:

கலியுகாதி சாலிவாகன சகாப்தம் 1442ல் விஜய நகரம் ஸ்ரீ கிருஷ்ணதேவமகாராயர், கொங்கின் வீரசோழ மண்டலத்துக்குன்றத்தூர் துர்க்கத்தைச் சூழ்ந்த பன்னி ரண்டு பற்றுத்திரியம்பக உடையார், கீழ்க்கரைப்பூந்துறை நாட்டில், ஸ்ரீ அர்த்தநாரீச்சுரமுடைய தம்பிரானுருக்கு உத்திராட நக்ஷத்திரத்தில் துவஜாரோகணமும், ரேவதி நக்ஷத்திரத்தில் தெப்பத்திருநாளும் நடத்தத்தக்கதாகச் சந்தையிலுண்டான சுங்கம், தாகு மகிமை முதலியவை களைத் தாரைவார்த்துக் கொடுத்ததாக......இந்த தர்மத்தைக் குன்றத்தூர்த் துர்க்கத்துக்குவந்த அரசர்களும், இத்தானத் துக்குவந்த அதிகாரிகளும், இந்த நாட்டாண்மைக்காரக் கவுண்டர்களும், நடாத்திவைக்க........... "

கருப்பக்கிரகத்திலுள்ளது :

"நரசிம்மராய உடையார் காரியத்துக் கடவோமாக. உடையார் கோங்கின் வீரசோழமண்டலத்துக் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுத் திருச்செங்கோட்டுத் திருமலைமேல் எழுந்தருளிய அர்த்தநாரீச்சுரருக்கும், சுப்பிரமணியருக்கும் தர்மதானப்பிரமாணம் பண்ணிக்கொடுத்த பரிசாவது, இந்த நாட்டுச் சூரப்பள்ளியான் அகரமும், நத்தமும் உள்ளாக நான்கு எல்லைக்கும் உட்பட்ட மேனோக்கிய மரமும், கீழ் நோக்கிய கிணறும் நஞ்சை, புஞ்சையாவும் தர்மமாகக் கொடுத்தோம்."

"சுபமஸ்து ஸ்ரீ சாலிவாகனசகாப்தம் 1580ன் மேல் செல்லா நின்ற கீலக ஆண்டு மாசி மாதம் பதின்மூன்றும் நாள் ஸ்ரீமது காசிப கோத்திரம் விசுவநாத நாய்க்கர், திருமலை நாய்க்கர், முத்துவீரப்ப நாய்க்கர், குமார சொக்கநாத நாய்க்கர் திருச்செங்கோட்டுத் தானத்தாருக்கு விஞ்ஞாபனம். திருச்செங்கோடு அர்த்தநாரீச்சுர சுவாமிக்கும், விசுவநாதருக்கும்..................."

உற்சவர் ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் பிரபையிலுள்ளது :

'ஸ்ரீ அர்த்தநாரீச்சுர சுவாமியாருக்கு, பூந்துறை நாட்டுக் கணக்கு அர்த்தநாரியன் வேலையன் குமாரன் பெரிய அய்யன் தர்மம். சதாசேவை. அக்ஷய வருடம் தை மாதம் 13-தேதி, சாலிவாகன சகாப்தம் 1556ல் ஸ்ரீஅர்த்தநாரீச்சுரமுடைய தம்பிரானாலயத்தில் வேதவொலி சிறந்து ஓங்குமாறு மாம்பூண்டியை அக்கிராகாரமாக அரசனது புண்ணியமென்று தானம் செய்தனன்."

விமான உத்திரத்திலுள்ளது :

"ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1550 இதன்மேல் சேல்லா நின்ற பிரசோற்பத்தி ஆண்டு ஆடி மாதம் குமாரசாமி காங்கேயன் காரியத்துக்குக் கர்த்தரான சுப்ப நாயக்கன் மகன், சாமண்ணன் உபயம் (சத்தனக் குறடு.)

மோரூர் கண்ணகுலம் வேலபூபதி சந்ததி, குமாரநல்ல தம்பி வேற்றிக்குமாரசுவாமி சாலிவாகன சகாப்தம் 1599 நள வருடத்தில், ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் கோயில்முன், கிழக்கிலே விசுவேச்சுரர், விசாலாட்சியம்மை, நந்தி, பலி பீடம் முதலியன பிரதிட்டித்தான்."

645—1905 ஆம் ஆண்டு ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் கோயில் தேன் சுவற்றில் பூர்த்திபேருத கல்வேட்டில் நரசிம்மராய உடையாரின் ஏஜண்டு திம்மரசு உடையார் கோடுத்த தானம். அர்த்தநாரீச்சுரருக்கும், சுப்பிரமணிய சுவாமிக்கும். இது கீழக்கரைப் பூந்துறை, கோங்கு அல்லது வீரசோழ மண்டலத்தின் பிற்பகுதியேன்று குறிக்கப்பட்டுள்ளது.

646—1905 ஆம் ஆண்டு மேற்படி கோயிலின் முன் மண்டபத்தின் மேல்புறம் சுவற்றில், சகம் 1521 ல் சார்வரியில், "மண்டபம் கட்டி முடிந்தது" என்று குறிக்கப் பட்டிருக்கிறது.

647—1905 ஆம் ஆண்டு அதே மண்டபத்தின் தேன் சுவரில் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டைச்சார்ந்த மோரூர் வாசி ஒருவர், சகம் 1549 ல் விபவ ஆண்டில் மண்டபம் கட்டிய சேய்தி குறிக்கப்பட்டிருக்கிறது.

649—1905 ஆம் ஆண்டு சுப்பிரமணிய சுவாமி கோயில் முன் மண்டபத்து வடசுவற்றில் சகம் 1588 ஆம் ஆண்டு கீலக ஆண்டு மதுரைச் சோக்கநாத நாய்க்கர் ஆட்சியில் நிலதானம் செய்யப்பேற்றதாகக் குறிக்கப் பட்டிருக்கிறது. (கீலக ஆண்டு என்பது தவறு).

650—1905 ஆம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் அதே வடபுறம் சுவரில் வீரவிசுவநாததிருமலை நாய்க்கர் ஆட்சி, ஆண்டு சகம் 1581 ல் விளம்பி ஆண்டில் ஒரு கிராமதானம் செய்யப்பட்டது. அத்தானம் பருத்திப் பள்ளி நாட்டிலுள்ள "கோளங்கண்டை" என்னும் கிராமம் குமாரமுத்து திருமலை நாய்க்கருக்கு அளிக்கப்பட்டது.

651—1905 ஆம் ஆண்டு மேற்படி மண்டபத்தின் அடிவரிசை பூர்த்திபெருத ஒரு சாசனம். விஜயநகர அரசர் வீரப்பிரதாப கிருஷ்ணதேவமகராயர் ஆட்சி ஆண்டு சகம் 1444 ல் சித்திரபானில் சில திருவிழா நடாத்துதற்கு வரி வசூலித்துக்கோள்ளும் அதிகாரம் கோடுக்கப்பட்டது. இதில், குன்றத்தூர் துர்க்கம் கோங்கு அல்லது வீரசோழ மண்டலத்தில் உள்ளதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

653—1905 ஆம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் வடபுறம்சுவரில் காளயுக்தி ஆண்டில் சுப்பிர மணியர் ஆலயம் வடகரை நாட்டு ஆண்டியூர் வாசியால், கட்டப்பட்டதேனக் குறிக்கப்பட்டுள்ளது.

645—1905 ஆம் ஆண்டு சகம் 1585 சோபன ஆண்டு மலைமீதுள்ள காசிவிசுவேச்சுரர் கோவிலும், கோபுரமும் கட்டப்பட்ட சேய்தி, மேல்தளவரிசையில் வேட்டப்பட்டிருக்கிறது. இவ்வளவே, திருச்சேங்கோடு பற்றி யான் அறிந்த கல்வேட்டுக்கள்.

செப்பேடுகள் :

ஒரு சிவராம பண்டிதரிடம் இருக்கின்ற ஒரு செப்பேட்டில் மலைமேலுள்ள கோயிலுக்காக மைசூர் கிருஷ்ண ராஜ உடையார் கொடுத்த நிலதானம் குறிக்கப்பட்டுள்ளது.

வேருெரு செப்பேடு திரு. தி. அ. முத்துசாமிக்கோனுர் அவர்களிடம் இருக்கின்றது. அதில் இராசராசன் பத்தாம் ஆண்டில், கோல்லிமழவன், பிரதிகண்டசுந்தர சோழன் என்னும் மழவரையன், தூசியூர் வியாபாரிகள்மீது அவாகள் செய்த குற்றத்திற்காக வரிகளும், தண்டங்களும் விதித்த தாகவும், அதில் வசூலான தோகையை, உள்ளூர் பரமேச்சுரர் கோயிலுக்கு அளித்ததாகவும், ஒரு கிணறுவேட்டி உபயம் செய்ததாகவும், ஈழத்தில் இறந்துபோன தன் தந்தைக்காக வேன்றும் வேட்டப்பட்டுள்ளன.

முசிரித் தாலூக்காவுக்கு மழவநாடு என்று பெயர். தூசியூர், நாமக்கல் தாலுக்காவில் இருக்கிறது.

மேற்படியாரிடமுள்ள மற்ருெரு செப்பேட்டில் இராச ராசன் ஐந்தாம் ஆண்டில், ஒற்றியூரான் என்பவன் தூசியூர்த் திருமூலத்தானம் உடையாருக்குச் சில நிலங் களும், தடாகம், கணபதிநல்லூர் என்கிற அமண்குடி கிராமம் ஆகியவற்றையும் அளித்ததாகக் குறிக்கப்பட்டு உள்ளது. பிறகு அத்தானங்கள் அக்கோவிலில் செய்யும் "பஞ்ச ஓசைகளுக்காக" உவச்சகர்களுக்கு அளிக்கப் பட்டது. "பஞ்ச ஓசை" என்பது ஓர்வகை வாத்தியம். இவ்வாத்தியம் அக்காலத்தில் தூசியூர் திருமூலத்தானத்துச் சிவன் கோவிலில் வாசிக்கப்பட்டதாகத் தேரிகிறது.

இச்சாசனங்களும், சேப்பேடுகளும் "தென்னிந்திய சாசனஜாப்தா" இரண்டாவது வால்யம் 1919 ஆம் ஆண்டில் ஸ்ரீ V. இரங்காச்சரரியார் M.A., L.T., அவர்களால் வேளியிட்ட புத்தகத்தில் கண்டவை. The South India Incription Book - Volume II.

ஆலயம் : நாரி கணபதி மண்டபம், தாண்டவ பத்திரை விலாச மண்டபம், சபா நிருத்தன மண்டபம், ஆய மண்டபங்கள். ஸ்ரீ விசாலாக்ஷி சமேத விசுவநாதர், ஆதிகேசவப்பெருமாள், ஸ்ரீ நாகேச்சுவரர் சேங்கோட்டு வேலவர் ஆலயங்களை உள்ளுடையதாகிக் கர்ப்பக்கிரக அர்த்தமண்டப மகாமண்டபங்களுடன் சுற்றுப்புறத் திரு மதில்களோடு பிரகாரங்கள் சூழ அழகிய திருக்கோபுரத் திருவாயில்களோடு மேற்குநோக்கியதாகி மலைமிசைத் திகழ்கிறது. தவிர இதனையடுத்து நிலமட்டத்திலிருந்து 2000 அடி உயரமுள்ள மலைச்சிகர உச்சிப் பாறைமீதுள்ள ஸ்ரீ பாண்டீசர் ஆலயமும், மாடமாளிகைகள் திருவீதிகள் சூழ நகரின் நடுவில் கீழே கயிலாசநாதர் ஆலயமும் திகழ் கின்றன. இம்மலைமிசை ஆலயத்தை அடைதற்குரிய வழிநடைக் கற்படிகள் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டவை. இவ் வழிநடைப்பாதையில் அமைந்துள்ள அழகிய இளைப்பாரும் மண்டபம். தேவரடியாள் மண்டபம் முதலாய மண்டபங்கள் பலவும் காட்சிக்கும் இனியதாகிக் காணப் படுகின்றன.

மூர்த்திகள் : இறைவர்; அர்த்தநாரீஸ்வரர். இறைவி; பாகம்பிரியாள் அம்மை. இவர்களது அற்புத வடிவ அமைப்பு; கண்டார் உளங்கவரும் கவினுடையது. தவிர நாரிகணபதி, சித்திவிநாயகர், முத்திவிநாயகர், விசாலாக்ஷி,

விசுவநாதர், ஆதிகேசவப்பெருமாள், நாகேஸ்வரர், கோழிக் கொடியோடு வேற்படைதாங்கிய செங்கோட்டு வேலவர். ஐம்பூத இலிங்கங்கள், சூரியர் பயிரவர், தேக்ஷிணாமூர்த்தி, கேதாரஈசர் ஆய மூர்த்திகளோடு விழா மூர்த்தி அர்த்தநாரீசரும் உள்ளனர்.

பூசனையும் விழாவும்: உரிய காலங்களில் பூசனைகள் நன்கு நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் நன்கு சிறப்போடு கொண்டாடப்பெறுகின்ற வைகாசிப் பிரம் மோத்ஸவத்துடன் மாதந்தோறும் நடைபெறுதற்குரிய விழாக்களும் சிறப்புறுகின்றன. மேற்குறித்த விழாக்கள் கீழே நகர்நடுவே உள்ள கயிலாசநாதர் ஆலயத்திருந்தே நடைபெறுகின்றன.

தீர்த்தங்கள்: இத்தலத்து மலைமிசைத் திகழும் புண்ணிய தீர்த்தங்கள் அளவற்றன. அவற்றுள் தற்போது காணப்படுவன ஒரு சில.

1. கணபதி தீர்த்தம்: இது உமையவள் ஆணை வழி விநாயகர் தோற்றுவித்தது.

2. பாவநாசத் தீர்த்தம்: இது இளைப்பாறு மண்டபத் துக்குக் கிழக்கில் உள்ளது. சர்வ பாபங்களையும் போக்க வல்லது. இத் தீர்த்தக்கரையில் மூன்று தலைகளுடைய மூர்த்தி சுரதேவரும் உள்ளார். இவர் சகலவித சுரங் களையும் போக்கிடுவார்.

3. சிவ தீர்த்தம்: இது தேவரடியாள் மண்டபத் திற்கு வடக்கில் உள்ளது. தருமதேவதை, தன்மமுனி வடிவம்கொண்டு வந்து இதில் நீராடி வழிபட்டு அருளுற்ற காரணம்பற்றி இடபதீர்த்தம் தன்மதீர்த்தம் எனும் பேயர்களை யும் உடையது.

4. பயிரவ தீர்த்தம் : இது பயிரவரால் தோற்று விக்கப்பெற்றது. சிவ தீர்த்தத்திற்கு கிழக்கில் உள்ளது. பராசரர் அருள்வழி. இங்குற்ற உச்சினி அரசன் மனோவஜன் இதில் நீராடி வழிபட்ட புண்ணியவசத்தால் இழந்த, தமது அரசுரிமையை மீண்டும் கைவரப்பெற்றான். இதன் பெருமை அளவிடற்கரியது.

5. தேவ தீர்த்தம் : இறைவர் திருவடிக்கீழ் உள்ளது. இது இறைவரைப் பூசிப்பவரே, தீண்டுதற்குரியதாகித் திகழ்கிறது.

6. சத்தி தீர்த்தம் : இது ஆலயத்தின் வடக்கில் உள்ளது.

7. நாக தீர்த்தம் : மதிற்புறத்து தேவ தீர்த்தத்தை அடுத்து கிழக்கில் உள்ளது. தவிர,

8. சண்முக தீர்த்தம். 9. பாண்டவ தீர்த்தம். 10. குமார தீர்த்தம். 11. சூரியபுஷ்கரணி. 12. சப்த கன்னி தீர்த்தம். 13. சந்த்ரபுஷ்கரணி. 14. விஷ்ணு தீர்த்தம். 15. இலக்குமி தீர்த்தம் முதலியனவும் உள்ளன. இப்புண்ணிய தீர்த்தங்களில் நீராடி வழிபடுவோர் பெறுதற் குரிய எல்லா நலங்களும் பெற்று இன்புறுவார்.

தலவிருக்ஷம் : இலுப்பை மரம் இது. மலைமிசை ஆலயம் வடக்குப் பிரகாரத்துள் மேடைமீதுள்ளது.

இருப்பிடம் : ஈரோடு to சேலம் புகைவண்டிப் பாதை யில் சங்ககிரிதுர்க்கம் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே ஐந்து மையிலில் உள்ளது.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள்

பதிக வரலாறு

திருஈங்கோய்மலையைவழிபட்ட சிவஞானப்பிள்ளையார் திருக்கொடிமாடச் செங்குன்றூரை அடைந்தார். அந்நகரில், வாழ்கின்ற மக்களும் சிவனடியார்களும், மகரதோரணம் முதலியவற்றால் நகரை அலங்கரித்து, வாத்தியமுழங்க, எதிர்கொண்டழைத்தனர். சினவிடையார் திருக்கோயிலுக்கு வரவேண்டினர். அங்ஙனமே ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளி, நம்பர் அவர் திருமுன்பு தாழ்ந்தெழுந்து நலஞ்சிறக்க மண்ணவரும் விண்ணவரும் போற்ற இன்னிசை வண்டமிழாகிய "வேந்த வெண்ணீறு" என்னும் இப் பதிகத்தை அருளினர்.

பண் - வியாழக்குறிஞ்சி

இராகம் : சௌராட்டிரம்] [தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

வெந்தவெண்ணீ றணிந்து விரிநூல் திகழ்மார்பின்நல்ல
பந்தண வும்விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக் [நின்ற
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
அந்தண னைத்தொழுவார் அவலம் அறுப்பாரே. 1

1. பூணுநூல் திகழ்கின்ற திருமார்பில் வெண்ணீ றணிந்து உமையொருபாகமாகக் கொடிமாடச் செங்குன்றூரில்

இவை ஆதீன வெளியீடு முதல் திருமுறை பக்கம் 460 to 463 வரையிலும், 492 to 496 வரையிலும் உள்ளபடி.

நின்ற அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பார் என்கின்றது. அணவும் - கலக்கும். கொந்து - கொத்து.

அலைமலி தண்புனலோ டரவஞ்சடைக்கணிந்து ஆகம்
மலைமகள் கூறுடையான் மலையா ரிளவாழைக் [நின்ற
குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
தலைமக னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே. 2

2 கங்கை, பாம்பு இவற்றைச் சடைக்கணிந்து மலைமகள் கூறுடையனாக எழுந்தருளியிருக்கின்ற செங்குன்றூர்த் தலைவனைத் தொழுவார் தடுமாற்றம் தகர்ப்பர் என்கின்றது. அரவம் - பாம்பு.

பாலன நீறுபுனை திகழ்மார்பிற் பல்வளைக்கை நல்ல
ஏல மலர்க்குழலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக் [மல்கும்
கோல மலர்ப்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
நீலநன் மாமிடற்றான் கழலேத்தல் நீதியே. 3

3. நீறுபூசிய திருமேனியோடு மலைமகள் ஒருபாகமாக எழுந்தருளிய செங்குன்றூர் நீலகண்டன் திருவடியைத் தொழுதலே நீதி என்கின்றது. ஏலம் - மயிர்ச்சாந்து. நீலநன் மாமிடற்றான் - நீலகண்டன். நன்மிடறு என்றது தேவர்க்கு நன்மை செய்தலின்.

வாருறு கொங்கைநல்ல மடவாள் திகழ்மார்பில் நண்ணும்
காருறு கொன்றையொடும் கதநாகம் பூண்டருளிச்
சீருறும் அந்தணர்வாழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
நீருறு செஞ்சடையான் கழலேத்தல் நீதியே. 4

4. உமாதேவி விளங்குகின்ற, திருமார்பில் கொன்றை மாலையையும் பாம்பு அணியையும் பூண்டு வீற்றிருக்கும்

சேங்குன்றூர் நாதன் சேவடியைத் துதித்தல் நீதியாம் என் கின்றது. வார் - கச்சு. கதம் - கோபம். சீர் - புகழ்.

போன் திகழாமையோடு புரிநூல் திகழ்மார்பில் நல்ல
பன்றியின் கோம்பணிந்து பணைத்தோளியோர் பாகமாகக்
குன்றன மாளிகைசூழ் கோடிமாடச் சேங்குன்றூர் வானில்
மின்திகழ் சேஞ்சடையான் கழலேத்தல் மேய்ப்போருளே.

5. ஆமையோடு பூணூலும் விளங்கும் மார்பில் பன்றிக் கோம்பையும் அணிந்த மாதோருபாதியனுன சேங்குன்றூர் நாதன் கழலேத்துதலே மேய்ப்போருள் என்கின்றது. போன் திகழ் ஆமை ஓடு - திருமகள் விளங்குகின்ற திருமாலாகிய ஆமையின் ஓடு. பணை - மூங்கில்.

ஓங்கிய மூவிலைநற் சூலம் ஒருகையன் சேன்னி
தாங்கிய கங்கையோடு மதியஞ் சடைக்கணிந்து
கோங்கண வும்போழில்சூழ் கோடிமாடச் சேங்குன்றூர் வாய்ந்த
பாங்கன தாள்தோழுவார் வினையாய பற்றறுமே. 6

6. சூலமேந்திய கையனும், கங்கையும் மதியமும் சூடிய வனும் ஆகிய சேங்குன்றூர் நாதன் தாள் தோழுவாரது வினைப்பற்று நீங்கும் என்கின்றது. ஓங்கிய - சிறந்த, கோங்கு அணவும் - கோங்க மரங்கள் கலந்த, பாங்கன தாள் - தோழமை பூண்ட இறைவனுடைய தாள்கள்.

நீடலர் கோன்றையோடு நிமிர்புன் சடைதாழ வேள்ளை
வாட லுடைதலையிற் பலிகோள்ளும் வாழ்க்கையனுய்க்
கோடல் வளம்புறவிற் கோடிமாடச் சேங்குன்றூர் நின்ற
சேடன தாள்தோழுவார் வினையாய தேயுமே. 7

7. கொன்றை மாலையோடு சடைதாழ. உலர்ந்ததலையிற் பலிகொள்ளும் செங்குன்றூர்நாதன் தாள் தொழுவாரது வினை தேயும் என்கின்றது. நீடு அலர் கொன்றை - மாலையாக நீண்டு மலர்கின்ற கொன்றை, வாடல் - உலர்தல், கோடல் - செங் காந்தள். சேடன் - பெருமையுடையவன்.

மத்தநன் மாமலரும் மதியும்வளர் கொன்றையுடன் துன்று
தொத்தலர் செஞ்சடைமேல் துதைய உடன்சூடிக் [மேய
கொத்தலர் தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
தத்துவ னைத்தொழுவார் தடுமாற் றறுப்பாரே. 8

8. ஊமத்தம்பூவும், பிறையும், கொன்றையும் செஞ்சடை மேற் சூடிய தத்துவனைத் தொழுவார் தடுமாற்றம் அறுப்பார், என்கின்றது. துன்று - நெருங்கிய, தொத்து - கொத்து, துதைய - செறிய, தத்துவன் - மெய்ப்பொருளானவன்.

செம்பொனின்மேனியனும் பிரமன்திரு மாலுந்தேட நின்ற
அம்பவ ளத்திரள்போல் ஒளியாய ஆதிபிரான் [மேய
கொம்பண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
நம்பன தாள்தொழுவார் வினையாய நாசமே. 9

9. அயனும் மாலும் தேடச் செம்பவளத்திரள்போல தீவடிவாய ஆதிப்பிரானது தாள் தொழுவார் வினைகள் யாவும் நாசமாம் என்கின்றது. கொம்பு அணவும் பொழில் - கொம்பு கள் செறிந்த சோலை. நம்பன் - சிவன்.

போதியர் பிண்டியரென் றிவர்கள் புறங்கூறும்
பொய்ந்நூல்
ஓதிய கட்டுரைகேட் டுழல்வீர் வரிக்குயில்கள் [நின்ற
கோதிய தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
வேதியனைத்தொழநும் வினையான வீடுமே. 10

10. புத்தர் சமணர் இவர்களுடைய புறவுரை கேட்டு உழலுகின்ற மக்களே! செங்குன்றூர் வேதியனைத்தொழ உங்கள் வினையாயின அழியும் என்கின்றது. போதியர் - புத்தர். பிண்டியர் - சைனர். கட்டுரை - கட்டிச்சொன்ன பொய்யுரை. கோதிய - முக்காற்கோதியுண்ட. வேதியன் - வேதங்களை அருளிச்செய்தவன். வீடும் - அழியும்

அலைமலி தண்புனல்சூழ்ந் தழகார் புகலிந்நகர் பேணும்
தலைமக னாகிநின்ற தமிழ்ஞான சம்பந்தன் [ரேத்தும்
கோலைமலி மூவிலையான் கோடிமாடச் செங்குன்றூ
நலமலி பாடல்வல்லார் வினையான நாசமே. 11

11. ஞானசம்பந்தப்பெருமான் செங்குன்றூர் நாதரை ஏத்திய நலமிகுந்தபாடல் வல்லார் வினைகள் நாசமாம் எனப் பயன் கூறுகின்றது. புகலி - சீகாழி. கோலைமலிமூவிலையான் - கோலைபுரியும் முத்தலைச் சூலம் ஏந்தியவன்.

திருச்சிற்றம்பலம்



பதிக வரலாறு

கோடிமாடச் செங்குன்றூரில் சிவஞானச் செம்மலார் அடியார்களுடன் தங்கியிருந்தகாலத்துப் பனிக்காலம் வந்துவிட்டது. அதனால் அடியார்கள் நளிர்சுரத்தினால் வருந்தினார்கள். பிள்ளையாரிடம் விண்ணப்பம் செய்து கொண்டனர். 'இந்த நளிர்சுரம் வருதல் இந்த நாட்டிற்கு இயல்பாயினும் நமக்கு இந்தநோய் எய்தப்பெறா, நீல கண்டமே எந்நாளும் அடியார் இடர்தீர்க்கும் அருந்துணை' என்று எண்ணி "அவ்வினைக் கிவ்வினை" என்னும் திருப் பதிகத்தைத் தொடங்கி, ஒவ்வொரு திருப்பாடல் இறுதி யிலும் "செய்வினை தீண்டா திருநீலகண்டம்" என ஆணை வைத்து அருளிச்செய்தார்கள். உடனே அடியார்களுக்கு மட்டுமன்றி அந்நாட்டிலேயே சுரநோய் தொலைந்தது.

(திருநீலகண்டம்)

பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும்நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

1. நாம் முன்முன் பிறவிகளில் ஈட்டிய தீவினைகட்கு ஏற்ப இப்பிறவியில் பிராரத்தம் வந்தூட்ட இத்துன்பம் அனுப விக்கிறோம் என்று சொல்லும் அடியார்களைப் பார்த்து நீங்கள் உய்வைத் தேடாதிருப்பது ஊனமல்லவா? கைத்தொண்டு செய்து கழலைப்போற்றுவோம்; நாம் செய்தவினை நம்மைத்

தீண்டா : திருநீலகண்டம் என்கின்றது. அவ்வினைக்கு - முன்னைய வினைக்கு, இவ்வினை - இப்போது சுரநோயால் வருந்தும் இவ்வினை. உய்வினை - தீரும் உபாயத்தை. கைவினை- கிரியைகளாகிய சிவப்பணி.

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயில் மூன்றெரித் தீர்என் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். ௨

௨. திரிபுரம் எரித்த பெருமானே! நந்தவனம் வைத்தும், குளந்தோண்டியும், பூவெடுத்துக்கட்டி அணிவித்தும் போற்றுவோம்! ஆதலால் தீவினை எம்மைவந்து தீண்டப்பெறா திருநீலகண்டம் என்கின்றது. கா - சோலை, தொட்டும் - தோண்டியும், ஏ வினையால் - அம்பின் தொழிலால்.

முலைத்தட மூழ்கிய போகங் களுமற் றவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட
விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

௩. போகங்கள் எம்மைப் பற்றாவண்ணம் தடுத்தாண்ட பெருந்தகையீர்! சூலம் மழு இவற்றையுடையீர்! எம்மை வினை தீண்டப்பெறா என்கின்றது. விலைத்து அலையாவண்ணம்- அடியேனை விலகச்செய்து அலையாவண்ணம்; விலையாகக் கொண்டு எனலுமாம். சிலைத்து - ஒலித்து.

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதும் தொழப்படும் புண்ணியரே

கண்ணிமை யாதன மூன்றுடை யீர்உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றுதிரு நீலகண்டம். 4

4. வேதியரும் வித்தியாதரர்களும் புண்ணியர் என்று தோழும் புண்ணியரே! உம் கழல் அடைந்தோம்; திண்ணிய தீவினை தீண்டப்பெரு என்கின்றது. திண்ணியதீவினை தீண்டப் பெரு என்றது இதுவரை நுகர்ந்த அளவிலேயே அமைவதாக. திருவருள் நோக்கத்தால் அவை மேன்மையாயின ஆதலின் இங்ஙனம் கூறினர்.

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் டோளுடையீர்
கிற்றேமை யாட்கோண்டு கேளா தோழிவதும் தன்மைகோலோ
சோற்றுணை வாழ்க்கை துறந்தும் திருவடி யேயடைந் தோம்
சேற்றேமைத் தீவினை தீண்டப்பெ றுதிரு நீலகண்டம் 5

5. ஒப்பற்ற மலைபோல் திரண்ட தோளுடையீர்! எம்மை யாட்கோண்டும் எம்குறையைக்கேளாதோழிவது பெருமையோ எல்லாத் துணையையும் விட்டு உமது திருவடி யடைந்தோம் ஆதலால் எம்மைத் தீவினை தீண்டப்பெரு. திருநீலகண்டம் ஆணை என்கின்றது. மற்று - வேறு. இணை - ஒப்பு. கிற்று - வலி படைத்து. சோல்துணைவாழ்க்கை - சோல்லப்படுகிற துணைகள் பலவற்றோடும் கூடிய வாழ்க்கை, சேற்று - வருத்தி. எமது வினைகளை வெருட்டும் வலியுடையீர் என்று குறிக்க இணையில்லா மலைதிரண்டன்ன தோளுடையீர் என்று குறிப்பித்தது. எமக்கும் தேவரீர்க்கும் உள்ள தோடர்பு ஆட்கோள்ளப்பட்டதால் உண்டான ஆண்டானும் அடிமையு மான தோடர்பு அங்ஙனமிருந்தும் எமது குறையை நீரே யறிந்து நீக்கவேண்டியிருக்க, சோல்லியும் கேளாது ஒழிவதும் தன்மையோ என்றார், துணையேன்று சோல்லப்படுகின்ற

வாழ்க்கைகளைத் துறந்து உம் திருவடியடைந்தோம் என்றது அகப்புற்றும் புறப்பற்றும் வீட்டு உம்மைப்பற்றினோம் என்றது தீவினை செற்றுத்தீண்டப்பெறு என்றது தீவினைகள் தீண்டு பவற்றைத் தடுத்தலாகாது ஆயினும் அவை வலியிழந்தன வாகத் தீண்டா என்று விளக்கியவாறு.

மறக்கு மனத்தினை மாற்றியெம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக் கீழ்ப்பிழை
யாதவண்ணம்
பறித்த மலர்கோடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றுதிரு நீலகண்டம். 6

6. எம்மோடு ஒன்றி வராமல் மறுக்கும் தன்மைவாய்ந்த மனத்தையும் மாற்றி, உயிரை வற்புறுத்தித் தேவரீர் திருவடிக்குப் பிழை ஏற்படாதவண்ணம் மலர்கொண்டேத்தும் அடியேங்களைச் சிறப்பில்லாத இத்தீவினைகள் தீண்டப்பெறு திருநீலகண்டம் என்கின்றது, மனத்திற்கு இயற்கை, பற்றியதை விட்டுப்பற்றி, அதன் மயமாய், பற்றியதையும் மறந்துவிடுதல் அந்த நிலையை மாற்றி என்றார். திருவடியையே பற்றிவிடாது நிற்றலின் வினையின் வழிநின்று மலமறைப்பால் தடுமாறும் ஆன்மாவை வற்புறுத்தி. சிறப்பில் இத்தீவினை - சிறப்பற்ற இந்தத்தீவினை.

• • • • 7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்தும் கழலடிக்கே
உருகி மலர்கோடு வந்துமை யேத்துதும் நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றுதிரு நீலகண்டம். 8

8. பிறவியை அறுத்து உலகவாழ்க்கையை வெறுத்து உம் திருவடிக்கே உருகிவழிபடும் எமக்குத் தீவினை தீண்டப்

பெரு திருநீலகண்டம் என்கின்றது. கரு - பிறவிமுதல். செரு இல் அரக்கன் - போரில்லாத இராவணன். திக்விஜயம் பண்ணிப் போரில்லாமையால் தருக்கிக் கயிலை எடுத்தானுதலின் இங்ஙனம் கூறினர். திரு இல் - சிவனடி வழிபடும் செல்வத்தை யில்லாத.

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுதுவணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். 9

9. மலர்மேலயனும் திருமாலும் தங்களுக்குள் வாது செய்து அடிமுடியும் அறியப்படாத தன்மையை யுடையவரே! காணப்பெறினும் பெறுவீர். உம்மைத் தொழுது வணங்குவோம்; சீற்றமாகிய வினை எம்மைத் தீண்டப்பெரு; திருநீலகண்டம் என்கின்றது. நாற்றம் - மணம். தோற்றமுடைய - கட்புலனுகிய. சீற்றம் - கோபம்.

சாக்கியப் பட்டுஞ் சமணுருவாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீர்அடி போற்றுகின்றேம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ ருதிரு நீலகண்டம். [றேம்

10. சாக்கியராயும் சமணராகியும் இருமையின்பமும் ஒழிந்தார்கள்; நாங்கள் நும் திருவடி போற்றுகின்றேம். எம்மை வினை தீண்டப்பெரு என்கின்றது. இருதலைப்போகம் - இம்மை மறுமை யின்பம். தீக்குழித் தீவினை - தீக்குழியினைப் போலக் கனலுவதாகிய தீவினை.

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண்டாகில் இமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. 11

11. எமது இறைவன் கழலடையப் பிறந்த இப்பிறவியில் சிவபெருமான் திருவடியைப்பேணி, மீட்டும் பிறவியுளதாயின், இம்மொழி பத்தும் வல்லார்கள் வானவர்கோனொடுங் கூடுவர் என்கின்றது. அடைவான் பேணி, வல்லார், பிறவியுண்டாகில் கோனொடுங் கூடுவர் என முடிக்க.

திருச்சிற்றம்பலம்



திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

தோலும்துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசும்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தோக்க வளையும் உடைத்தோன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

திருவிசைப்பா

திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை அரையர்தம் பாவை
தருமலி வளனும் சிவபுரன் தோழன்
தனபதி சாட்டியக் குடியார்
இருமுகம் கழல் மூன்று ஏழு கைத்தலம் ஏழ்
இருக்கையில் இருந்த ஈசனுக்கே.

திருப்பல்லாண்டு

சேலும் கயலும் திளைக்கும் கண்ணார்
இளங்கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கும் என்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தேன் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்து நின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

அண்டர்பிரான் ஆலயங்கள் அம்மருங்குள் ளனபணிந்து
தெண்டிரை நீர்த்தடம் பொன்னித் தென்கரையாம்
கொங்கினிடை
வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்கள் தொழு
தணைந்தார்
கொண்டல்பணி நெடும்புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர்.

தம்பெருமான் கோயிலினுள் எழுந்தருளித் தமிழ்விரகர்
நம்பரவர் திருமுன்பு தாழ்ந்தெழுந்து நலம்சிறக்க
இம்பரும்உம் பரும்ஏத்த இன்னிசைவண் தமிழ்பாடிக்
கும்பிடும் ஆதரவுடன்அக் கோநகரில் இனிதமர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்



ஸ்ரீ அருணகிரிநாதர் அருளியன

கந்தரலங்காரம் 8

வேண்டுகோள்

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேன்உனைநான்
ஐவர்க் கிடம்பெறக் கால்இரண் டோட்டி அதில்இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

முத்திபெற

சுழித்தோடும் ஆற்றிற் பெருக்கா னதுசெல்வம் துன்பம் இன்பம்
கழித்தோடு கின்றதெக் காலம்நெஞ் சேகரிக் கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோடன் என்கிலை குன்றம்எட்டும்
கிழித்தோடும் வேல்என்கிலை எங்ங னேமுத்தி கிட்டுவதே.

பழிநீங்க

விழிக்குத் துணைதிரு மேன்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்ரு
மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடிவேலும் செங் கோடன் மயூரமுமே.

பெருமைபெற

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வேற்பனைச்
செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாம்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒருதாழ்வில்லையே.

கண்பெற்ற பயன்

மாலோன் மருகனை மன்றுடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்தில னேஅந்த நான்முகனே.

மேலாயநலம்

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானம்உய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
தருமாமருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

திருவடிச்சிறப்பு

சேலில் திகழ்வயல் செங்கோடை வேற்பன் செழுங்கலபி
ஆலித் துஅனந்தன் பணுமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலில் கிடப்பன மாணிக்க ராசியும் காசினியைப்
பாலிக்கு மாயனும் சக்ரா யுதமும் பணிலமுமே.

நினைவின்தோற்றம்

செங்கே ழடுத்த சினவடி வேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கோங்கே தரளம் சொரியும்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேஎன் முன்வந்து எதிர்நிற்பனே.

கந்தர் அநுபூதி 1

கூகா எனஎன் கிளைகூ டிஅழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே

திருவகுப்பு 2

பூத வேதாள வகுப்பு

தனன தனதன தனன தனதன
    தனன தனதன தனன தனதன
தனத னுதன தந்தன தந்தன
    தனத னுதன தந்தன தந்தன
தத்ததன தானதன தத்ததா னத்தனன
    தத்ததன தானதன தத்ததா னத்தனன
தந்தத் தந்தனத் தான தாந்தன
    தந்தத் தந்தனத் தான தாந்தன
தத்தன தத்தன தத்தன தத்தன
    தத்தன தத்தன தத்தன தத்தன
தானதன தந்ததன தானதன தந்ததன
    தானதன தந்ததன தானதன தந்ததன
தனதன தனந்தனந் தந்தான தத்ததன
    தனதன தனந்தனந் தந்தான தத்ததன
தனதனன தானதன தத்தனன தத்தனன
    தனதனன தானதன தத்தனன தத்தனன
தனதன தத்த தனத்தன தத்த தானன
    தனதன தத்த தனத்தன தத்த தானன
தானனு தான தனுதன தந்தன
    தானனு தான தனுதன தந்தன.

அருண கணபண புயக சுடிகையின்
அகில புவனமும் உதவு மலைமகள்
அமலை ஆரியை அந்தரி சுந்தரி
இமய மாமயில் அம்பைத்ரி யம்பகி
அச்சுதச கோதரிஅ னைத்துவே தத்தலைவி
அற்புதபு ராதனிவ ரப்ரகா சப்ரக்ருதி
அம்பொற் குண்டலப் பேதை சாம்பவி
விம்பக் கிஞ்சுகப் பூவை பூங்கொடி
அக்ஷர லக்ஷஜ பத்தர்க்ர மத்திடு
சக்ரத லத்தித்ரி யக்ஷிச டக்ஷரி
ஆயிதிரு மைந்தன்முகம் ஆயிரம்வி ளங்கியதோர்
ஆறுதா வந்தருளும் ஆறுமுக புண்டரிகன்
அருவரை திறந்துவன் சங்க்ராம கற்கிமுகி
அபயமிட அஞ்சலேன் றங்கீர னுக்குதவி
அரசறிய வாமனமு நிக்கொருத மிழ்த்ரயமும்
அபரிமித மாகவிவ ரித்தகட வுட்புலவன்
அநுபவ சித்த பவக்கட லிற்பு காதேனை
வினவியே டுத்தருள் வைத்த கழற்க்ரு பாகரன்
ஆசிலா சார தபோதனர் இன்புறும்
வாசகா தீத மனோலய பஞ்சரன்
அகரு ம்ருகமத களப பரிமள
விகட முகபட கடின புளகித
அமிர்த பூதரி அண்டர்சே ழுங்கொடி
குமுத வாய்மயில் குஞ்சரி மஞ்சரி
அக்கமொரு கோடிபெறு வஜ்ரபா ணிக்குமரி
தக்கஅம ராவதிபு ரக்கும்ஆ னைக்கிறைவன்
ஐம்பத் தொன்றில் எட் டாறில் மூன்றினின்
ஐந்திற் றங்குமப் பாலை வான்பொருள்
அப்படி பத்திப முத்தம னத்தினர்
அர்ச்சனை மெச்சிய செச்சை மணிப்புயன்

ஆறுநிலை யென்றுமுத லாகியப ரங்கிரியும்
ஆவின னேடுங்குடியும் ஆரண முடிந்திடமும்
அருணையும் இலஞ்சியுஞ் செந்தூர்தி ருப்பழநி
அடியர்மன பங்கயஞ் செங்கோடு இடைக்கழியும்
அநவரத நீலமலர் முத்தெறிசு னைப்புனலில்
அருவிகுதி பாய்தருசெ ருத்தணியேன் வேற்புமெனும்
அலகில்தி ருப்ப தியிற்பயில் கற்ப காடவி
அநுபவ னத்தனி ருத்தன ரத்த ஆடையன்
ஆறுமா மாதர் பயோதர பந்தியில்
ஆரவே பால முதாருநே டுந்தகை ;
வருண சரவண மடுவில் வருமோரு
மதலை மறைகமழ் குதலை மோழியினன்
மதுக ராரவ மந்திர சிந்துர
மணம ருதக டம்புபு னைந்தவன்
மட்டோழுகு சாரமது ரித்ததே னைப்பருக
மர்க்கடச முகமமை தோட்டிரு லேட்டுவரை
மன்றற் பைம்புனத் தாள்ப தாம்புயம்
வந்திக் குந்தனிக் காம வாஞ்சையன்
மத்தமு டித்தரு ளத்தர்ப்ரி யப்பட
நித்தம றைப்போரு ளைத்தேளி வித்தவன்
மாதிரமும் மந்தரமும் நீருநில னுங்கனக
மால்வரையு டன்சுழல வாசுகிவி டம்போழிய
மகரச லிலங்கடைந் திந்த்ராதி யர்க்கமுது
பகிர்தரு முகுந்தன்மன் பஞ்சாயு தக்கடவுள்
மருகன்மற வாதவர்நி னைப்பவைமு டிக்குமவன்
உருகுமடி யார்இருவி னைத்தோகைய றுக்குமவன்
மறவர்போ ருப்பி லோருத்திபோ ருட்ட நாள் இள
வடிவமு ழுக்க நரைத்தவி ருத்த வேதியன்
மாதரா ருபன் நிராகுல சிந்தையன்
ஆதிகூ தாள மதாணிய லங்க்ருதன்

வரத விதரண விரத அநுபவ
மவுன குருபரன் நிபுண குணதரன்
வனஜ ஜாதனை யன்றுமு னிந்தற
வலிய பாரவி லங்கிடு புங்கவன்
மட்டிலிரு நாலுதிசை கட்டுநே மிக்கிரியும்
உத்தரகு ஞதிகுட தக்ஷிஞ திக்கிரியும்
மங்கத் துங்கவிட் டேறு வாங்கிய
சேங்கைப் பங்கயச் சோதி காங்கேயன்
மத்தம லத்ரய மித்தைத விர்த்தருள்
சுத்தப வித்ரநி வர்த்மய ளிப்பவன்
வாரணமு கற்றனது தாதையைவ லஞ்சுழல
வாகைமயில் கோண்டுலகு சூழ்நோடிவ ருங்குமரன்
மயமுறு ப்ரபஞ்சமுஞ் சங்கேத ஷட்சமய
வழியும னமுங்கடந் தேங்கேனு நிற்குமவன்
மதுரமோழி யாலுலக னைத்தையுமு ணர்த்துமவன்
வடவனல நேர்கோடிய குக்குடமு யர்த்தகுகன்
மரகத பக்ஷ குலத்துர கத்தி வாகரர்
வடிவையு ருக்கி வடித்ததி ருக்கை வேல்கோடு
வாரிகோ கோவேன வாய்விட வந்தேதிர்
சூரமா சேனையை மோதுக ளந்தனில்
உருவ மிருளேழ வேயிறு நிலவேழ
வுலகு வேருவர வசைய வருவன
உடைய நாயகி கண்டும கிழ்ந்திட
நடைவி னோதவி தம்புரி பந்திய
ஒக்கலைவி டாதமுத ரற்றுபா லர்க்குமிக
வுச்சிவேடி யாதுநிண மேத்தபே தப்புவன
உங்குக் கிங்குவிட் டாழி நான்கினு
மோன்றுக் கோன்றடி பாய்தல் காண்பன
யுத்தக ளத்தினில் ரத்நம ணிக்குவை
யோட்டமோ டோற்றையி ரட்டைபி டிப்பன

யோகினிக ளும்பெரிய சாகினிக ளும்புதிய
மோகினிக ளும்பழைய டாகினிக ளும்புகழ
உவணநிரை கொண்டிடுஞ் செங்காவ ணத்திடையி
லுறவுகொள வந்துதம் பெண்காறை கட்டுவன
உமிழ்குருதி யாறடைப டக்குறட டுக்கியதி
லுபவனமோ ரேழையுமு றித்தருகோ ழுக்குவன
உடுபட லத்தை மறைத்தகு றைக்கு வாலுட
லுதிரச முத்திர முற்று நிலைப்ப டாதன
ஓடைமால் வார ணயூகம டங்கலு
மோரோர்பேய் நீள்க டைவாயில டங்குவ
உடலி னிசிசரர் மவுலி யோலியலு
முதடு மலைவன பதடி முலையின
உததி யேழும டங்கவு றிஞ்சியு
முதர வாரழ னின்றுகோ ளுந்துவ
உக்கிரவி ராவணனே டுத்தமே ருக்கிரியு
மோற்றியிரு தோள்கோடுப றித்திடா தப்புவன
ஒன்றித் திண்குரற் கூகை பாம்போடு
வென்றிச் செந்தலைத் தாலி பூண்பன
ஒக்கமி டற்றிலி றக்குகு றைத்தலை
விக்கிவே ளுக்கவே ளுக்கவி ழிப்பன
யோகுபுரி யுங்குகையும் யோகபர ரும்பொருவ
வோடைமத தந்திவயி றூடினிது றங்குவன
உசிதபி சிதங்கொணர்ங் திங்கேற விற்றுமென
மதமலையே லும்புகொண் டங்காடி கட்டுவன
உதிரநிண வாள்பெருக வோட்டுவன வெட்டுவன
உடலினடு வூடுருவ முட்டுவன தட்டுவன
ஒழுகுபி ணத்துநி ணத்தின ளற்றி லேபழு
வோடியவு ழக்கிவ முக்கி யுருட்டி வீழ்வன
ஊசலார் வார்க்கு ழையோலையீ டும்படி
யோதுசா மீகர நேமிபி டுங்குவ

கரண மிடுவன குணலை யிடுவன
கழையை நடுவன பவுரி வருவன
ககன கூடமு டைந்துவி ழும்படி
மதறி வாயனல் கண்கனல் சிந்துவ
கைச்சதியி னுமுறைவி தித்தவா முற்கடித
சச்சபுட சாசபுட சட்பிதா புத்திரிக
கண்டச் சம்பதிப் பேத மாம்பல
கஞ்சப் பஞ்சகத் தாள மாம்படி
கற்சரி யுற்சவ தர்ப்பண லக்ஷண
சச்சரி மட்டிசை யோட்டிய றுப்பன
காயெரிய பங்கியோடு சேகரமி குந்தசைவ
காதுபடு சங்கவள மாலிகைபு ணைந்திசைவ
கருணைய திகந்துவந் தோணகோகு லப்பெரிய
கருமுடியோ டும்படுங் கங்காள மோதுவன
கடிபயிர 'வாதிகள்ப்ரி யப்படுக திக்கிசைய
நடைநவிலு பாவனை யுதிக்குநட வித்தையின
கடகம டுத்த விடக்கைவ லக்கை வாளின
கருதிய லக்ஷிய லக்ஷண முற்று மோதுவ
காலமா ளுத வராளிசீ கண்டிகை
பாலசீ காம ரமானவி பஞ்சிகை
கவுட பயிரவி லளிதை கயிசிகை
கவுளி மலகரி பவுளி யிசைவன
கனவ ராடிய ரும்பட மஞ்சரி
தனத னுசிவி தம்படு பஞ்சமி
கைச்சுலவு கோன்முறைவி தித்தரா கத்தடைவி
லுச்சமது சாதிகள்ள டுத்துமேல் எட்டுவன
கஞ்சக் கஞ்சநற் றேசி ராஞ்சிகு
றிஞ்சிப் பண்குறித் தியாழை யேந்துவ
கற்றவு டுக்கையி டக்கைக ளப்பறை
மத்தளி கோட்டிய முற்றும்அ டிப்பன

காரேனமு ழங்குகுர லேறுதுடி சந்த்ரவளை
வீரமுர சுந்திமிற டாரிகுட பஞ்சமுகி
கரடிபறை யங்கனந் தங்கோடி கோட்டுவன
முறைமுறை கவந்தநின் றேன்றேடு கிட்டுவன
கசரதப தாகினிய ரக்கர்துணி பட்டுவிழு
களமுழுதும் வாழியதி ருப்புகழ்மு ழக்குவன
கடியகு ணத்த சினத்த சகத்ர யோசனை
நெடிய கழுத்த சுழித்த விழித்த பார்வைய
காதநூ றுயிர கோடி வளைந்தன
பூதவே தாள மநேகவி தங்களே.

வேடிச்சி காவலன் வகுப்பு

உதரகம லத்தினிடை முதியபுவ னத்ரயமும்
உகமுடிவில் வைக்கும்உமை யாள்பேற் றபாலகனும்
உமிழ்திரைப ரப்பிவரு வேகுமுககு லப்பழைய
உதகமகள் பக்கல்வரு சோதிச் சடானனனும்
உவகையோடு கிர்த்திகையர் அறுவரும்எ டுக்கஅவர்
ஒருவரோரு வர்க்கவனு ரோர்புத் ரனுனவனும்
உதயரவி வர்க்கநிகர் வனகிரண விர்த்தவித
முடையசத பத்ரநவ பீடத் துவாழ்பவனும்
உறைசரவ ணக்கடவுள் மடுவிலடர் வஜ்ரதர
னுடையமத வேற்புலைய வேதித் தவீரியனும்
உரைபெறவ குத்தருணை நகரினுெரு பத்தனிடும்
ஒளிவளர்தி ருப்புகழ்ம தாணிக் ருபாகரனும்
உரககண சித்தகண கருடகண யக்ஷகணம்
உபநிடமு ரைத்தபடி பூசிக் கும்வானவனும்
ஒருவனும கிழ்ச்சிதரு குருபரனும் உத்தமனும்
உபயமுறும் அக்நிகர மீதிற்ப் ரபாகரனும்;

அதிமதுர சித்ரகவி நிருபனும் அகத்தியனும்
அடிதொழுத மிழ்த்ரயவி நோதக் கலாதரனும்
அவரைபொரி எட்பயறு துவரை அவல் சர்க்கரையோ
டமுதுசெயும் விக்நபதி யானைச் சகோதரனும்
அவுணர்படை கெட்டுமுது மகரசல வட்டமுடன்
அபயமிட விற்படைகொ டாயத் தமானவனும்
அருணையி லிடைக்கழியில் உரககிரி யிற்புவியில்
அழகியசெ ருத்தணியில் வாழ்கற் பகாடவியில்
அறிவும்அறி தத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறியனஇ மைப்பொழுதில் வாழ்வித் தவேதியனும்
அரிபிரம ருக்குமுதல் அரியபர மற்குயரும்
அருமறைமு டிப்பைஉப தேசித் ததேசிகனும்
அமலனு மெனக்கரசும் அதிகுணனும் நிர்க்குணனும்
அகிலபுவ னத்தமர சேனைக் குநாயகனும்
அநுபவனும் அற்புதனும் அநுகுணனும் அக்ஷரனும்
அருமனமொ ழிக்கும்அநு பூதிச் சுகோதயனும்;

இதமகிதம் விட்டுருகி இரவுபக லற்றஇட
மெனதறஇ ருக்கைபுரி யோகப் புராதனனும்
எனதுமன சிற்பரம சுகமவுன கட்கமதை
யமன்முடி துணிக்கவிதி யாவைத் தபூபதியும்
எழுமையுமெ னைத்தனது கழல்பரவு பத்தனென
இனிதுகவி யப்படிப்ர சாதித் தபாவலனும்
இமையவர்மு டித்தொகையும் வனசரர்பொ ருப்பும்எனது
இதயமும ணக்குமிரு பாதச் சரோருகனும்
எழுதரிய கற்பதரு நிழலில்வளர் தத்தைதழு
வியகடக வஜ்ரவதி பாரப் புயாசலனும்
எதிரில்புல வர்க்குதவு வெளிமுகடு முட்டவளர்
இவுளிமுகி யைப்பொருத ராவுத் தனானவனும்

எழுபரிர தத்திரவி எழுநிலமோ டக்கரிகள்
இடர்படமு ழக்கியெழு சேவற் பதாகையனும்
இணையிலியும் நிர்ப்பயனும் மலமிலியும் நிஷ்களனும்
இளையவனும் விப்ரகுல யாகச் சபாபதியும் ;

மதுகையோடு சக்ரகிரி முதுகுநேளி யப்புவியை
வளையவரும் விக்ரமக லாபச் சிகாவலனும்
வலியநிக ளத்திளுேடு மறுகுசிறை பட்டொழிய
வனசமுனி யைச்சிறிது கோபித் தகாவலனும்
வருசுரர்ம திக்கவொரு குருகுபெயர் பெற்றகன
வடசிகரி பட்டுருவ வேல்தொட் டசேவகனும்
வரதனும நுக்ரகனும் நிருதர்குல நிஷ்டுரனும்
அநுபவன சித்தனும நோதுக் கபேதனனும்
வயிரிசைமு ழக்கமிகு மழைதவழ்கு றிச்சிதோறும்
மகிழ்குரவை யுட்டிரியும் வேடிக் கைவேடுவனும்
மரகதம ணிப்பணியின் அணிதழையு டுத்துலவும்
வனசரர்கோ டிச்சிதனை யாசிக் கும்யாசகனும்
மதனன்விடு புட்பசர படலம்உட லத்தனையும்
மடலெழுதி நிற்குமதி மோகத் தபோதனனும்
வரிசிலைம லைக்குறவர் பரவியபு னத்திதணில்
மயிலெனஇ ருக்குமொரு வேடிச் சிகாவலனே.

திருப்புகழ் 25

அன்பாக வந்து நின்ருள்ப ணிந்து
ஐம்பூத மொன்ற நினையாமல்
அன்பால் மிகுந்த நஞ்சாரு கண்கள்
அம்போரு கங்கள் முலைதானும்
கோங்கே மிகுந்து வண்டாடி நின்று
கொண்டாடு கின்ற குழலாரைக்
கொண்டே நினைந்து அன்பேது மின்றிக்
குன்ருமலைந்து அலைவேனே
மன்ருடி தந்த மைந்தாமி குந்த
வம்பார்க டம்பை அணிவோனே
வந்தேப ணிந்து நின்ருர்ப வங்கள்
வன்பேசி னந்த வடிவேலா
சென்றேயி றைஞ்ச கந்தா என் முன்பு
செஞ்சேவல் கொண்டு வரவேணும்
செஞ்சாலி கஞ்சம் ஒன்ருய்வ ளர்ந்த
செங்கோட மர்ந்த பெருமாளே.

செங்கோடமர்ந்த கந்தா, அடியேன் வீணே அலையாமுன் செஞ்சேவற்கொடி திகழவந்து அருளவேணும்.

செங்கோடு - சிவந்தமலை, செஞ்சாலி - செந்நெல், கஞ்சம் - தாமரை.

பந்தாடி அங்கை நொந்தார் பரிந்து
பைந்தார்பு னைந்த குழல்மீதே
பண்பார்சு ரும்பு பண்பாடு கின்ற
பங்கேரு கங்கொள் முகமீதே
மந்தார மன்றல் சந்தார மொன்றி
வன்பாத கஞ்செய் தனமீதே

மண்டாசை கொண்டு விண்டாவி நைந்து
மங்காம லுன்றன் அருள்தாராய்
கந்தா அரன்றன் மைந்தாவி ளங்கு
கன்றுமு குந்தன் மருகோனே
கன்று விலங்கல் ஒன்றுறு கண்ட
கந்தா அரம்பை மணவாளா
சேந்தாத டர்ந்த கொந்தார் கடம்பு
திண்டோள் நிரம்ப அணிவோனே
திண்கோ டரங்கள் எண்கோ டுறங்கு
செங்கோட மர்ந்த பெருமாளே.

என் ஆவி, ஆசையால்ஒழுகி மங்காமல் ஆறுமலை யிடங்கொண்டருளும் செங்கோட்டுக்கந்தா உன் அருளைத் தருவாயாக.

சுரும்பு - வண்டு, பங்கேருகம் - தாமரை, மண்டு - மிகுதி விலங்கல் - மலை, தாது - மகரந்தம், எண்கு - கரடி, கன்று கோபித்து, கோடரங்கள் - குரங்குகள்.

வண்டார்ம தங்க ளுண்டேம யங்க
வந்தூது கொண்டல் அதனோடும்
வண்காம னம்பு தன்கால்ம டங்க
வன்போர்ம லைந்த விழிவேலும்
கொண்டேவ ளைந்து கண்டார்தி யங்க
நின்றார் குரும்பை முலைமேவிக்
கொந்தார ரும்பு நின்தாள் மறந்து
குன்றும லுன்றன் அருள்தாராய்
பண்டாழி சங்கு கொண்டாழி தங்கு
பண்போ னு கந்த மருகோனே
பண்சார நைந்து நின்றேதும் அன்பர்
பங்காகி நின்ற குமரேசா

சேண்டாடி அண்டர் கோண்டாட மன்றில்
நின்ருடி சிந்தை மகிழ்வேலா
சேஞ்சாலி மிஞ்சி மஞ்சாடு கின்ற
சேங்கோட மர்ந்த பேருமாளே.

அன்பர் பங்குறைந்தருளும் சேங்கோட்டுக்குமரா, காமன் அம்பால் ஏறுண்டு மாதரார் வலேயிற்பட்டு மதிமயங்கி நின் அடிமறந்து குன்ருமல் உன் அருளேத் தருவாயாக.

கோண்டல் - மேகம், காமன் - மன்மதன்.

கரையற உருகுதல் தருகயல் விழியினர்
கண்டான சேஞ்சோல் மடமாதர்
கலவியில் முழுகிய நேறியினி லறிவுக
லங்காம யங்கும் வினேயேனும்
உரையையும் அறிவையும் உயிரையும் உணர்வையும்
உன்பாத கஞ்ச மலர்மீதே
உறவோடு புணேதர நினேதரு மடியரோ
டோன்ருக என்று பேறுவேனே
வரையிரு துணிபட வளேபடு சுரர்குடி
வந்தேற இந்த்ர புரிவாழ
மதவித கஜரத துரகத பததியின்
வன்சேனே மங்க முதுமீன
திரைமலி சலநிதி முறையிட நிசிசரர்
திண்டாட வேன்ற கதிர்வேலா
ஜேகதல மிடிகேட விளேவன வயலணி
சேங்கோட மர்ந்த பேருமாளே.

சூரரை வேன்ற முருகா, உலகில் மிடிதீர விளேவு மல்கிய சேங்கோட்டு வேலவா, உரை, உணர்வு, அறிவு, உயிர் இவைகளே உன்பாதமிசை இருத்திடும் அடியரோடு என்னேயும் ஒருவனுக்கி உய்யக்கோண்டருள்.

வரை - மலே, சுரர்குடி - தேவர்குடி, நிசிசரர் - அசுரர், ஜேகதலம் - உலகிலுள்ள ஊர், மிடி - தரித்திரம்.

சாலநெடு நாள் மடந்தை காயமதி லேய லேந்து
சாமளவ தாக வந்து புவிமீதே
சாதகமு மான பின்பு சீறியழு தேகி டந்து
தாரணியி லேத வழ்ந்து விளையாடிப்
பாலனென வேமொ ழிந்து பாகுமொழி மாதர் தங்கள்
பாரதன மீத ணைந்து பொருள்தேடிப்
பார்மிசையி லேயு ழன்று பாழ்நரகெய் தாம லொன்று
பாதமலர் சேர அன்பு தருவாயே
ஆலமமு தாக வுண்ட ஆறுசடை நாதர் திங்கள்
ஆடரவு பூணர் தந்த முருகோனே
ஆனைமடு வாயி லன்று மூலமென ஓல மென்ற
ஆதிமுதல் நார ணன்றன் மருகோனே
கோலமலர் வாவி எங்கு மேவுபுனம் வாழ்ம டந்தை
கோவையமு தூற லுண்ட குமரேசா
கூடிவரு சூரடங்க மாளவடி வேலெ றிந்த
கோடைநகர் வாழ வந்த பெருமாளே.

கங்கைஅணி திருச்சடையோன்சிவகுமரா. மால்மருகா, வள்ளிமணாளா. இப்புவியில் தோன்றி, பால்உண்டு தவழ்ந்து. பாவையரைக்கூடிப் பொருள் தேடி, வீணே உழன்று நர குற்று வருந்தாமல் உன் திருவடியிற்பொருந்தி இன்பம் பெற அன்பு தருவாயாக.

நீலமஞ் சானகுழல் மாலைவண் டோடுகதி
நீடுபங் தாடுவிழி யார்பளிங் கானநகை
நீலபொன் சாபநுத லாசையின் தோடசையும்
நீள்முகந் தாமரையி னூர்மொழிந் தாரமொழி
நேர்சுகம் போலகமு கானகந் தாரர்புய
நேர்சுணங் காவிகிளை ஏர்சிறந் தார்மலையி
ரண்டுபோல

நீளிபங் கோடிளநிர் தேனிருந் தாரமுலை
நீடலங் காரசர மோடடைந் தார்மருவி
நீள்மணஞ் சாறுபொழி யாவளம் போதிவையின்
நீலவண் டேவியநல் காமனங் காரநிறை
நேசசந் தானவல்குல் காமபண் டாரமுதை
நேருசம் போகரிடை நூலொளிர்ந் தாசையுயிர்
சம்பையாரம்

சாலுபொன் தோகையமை பாளிதஞ் சூழ்சரண
தாள்சிலம் போலமிட வேநடந் தான நடை
சாதிசந் தானெகின மார்பரந் தோகையென
தானெழுங் கோலவிலை மாதரின் பார்கலவி
தாவுகொண் டேகலிய நோய்கள்கொண் டேபிறவி
தானடைந் தாழுமடி யேனிடஞ் சாலும்வினை
அஞ்சியோடத்

தார்கடம் பாடுகழல் பாதசேந் தாமரைகள்
தாழ்பெரும் பாதைவழி யேபடிந் தேவருகு
தாபம்விண் டேயமுத வாரியுண் டேபசிகள்
தாபமுந் தீரதுகிர் போல்நிறங் காழ்கொளுரு
சாரவுஞ் சோதிமுரு காவெனுங் காதல்கொடு
தானிருந் தோதஇரு ஓரகம் பேறுபேற
விஞ்சைதாராய்

சூலியேந் தாய்கவுரி மோகசங் காரிகுழை
தோடுகொண் டாடுசிவ காமசுந் தரிநல
தூளணைந் தாளிநிரு வாணியங் காளிகலை
தோகைசேந் தாமரையின் மாதுநின் றேதுதிசெய்
தூயஅம் பாகழைகோள் தோளிபங் காக்ருபை
தோய்பரன் சேயெனவு மேபெரும் பார்புகழும்
விந்தையோனே

சூரசங் காரசுரர் லோகபங் காஅறுவர்
தோகைமைந் தாகுமர வேள்கடம் பாரதோடை
தோளகண் டாபரம தேசிகந் தாஅமரர்
தோகைபங் காவெனவே தாகமஞ் சூழ்சுருதி
தோதகம் பாடமலை ஏழுதுண் டாயெழுவர்
சோரிகொண் டாறுவர வேலெறிந் தேநடன
முங்கோள்வேலா

மாலியன் பாறவோரு ஆடகன் சாகமிகு
வாலியும் பாழிமர மோடுகும் பாகனனும்
ஆழியுங் கோரவலி ராவணன் பாறவிடும்
ஆசுகன் கோலமுகி லோனுகந் தோதிடையர்
மாதுடன் கூடிவிளை யாடுசம் போகதிரு
மார்பகன் காணமுடி யோன்அணங் கானமதி
ஒன்றுமானே

மார்புடன் கோடுதன பாரமுஞ் சேரஇடை
வார்துவண் டாடமுக மோடுகந் தீரரச
வாயிதங் கோதிமணி நூபுரம் பாடமண
ஆசைகொண் டாடுமயி லாளிதுங் காகுறவர்
மாதுபங் காமறைகு லாவுசெங் கோடைநகர்
வாழவந் தாய்கரிய மாலயன் தேவர் புகழ் தம்பிரானே.

ப்ரமகுருதேசிகா, மலைகள் ஏழுதுண்டாகிட எழுவர் குருதிகொண்டு ஆறு (சேயாறு) வரும்படி வேல் எறிந்த மால் மருகா, குறத்தி மணாளா, மாதரார் பால் மயங்கிடாமல் முருகா எனக் காதல்கொண்டு ஓதி எனது உள்ளம் நல்ல பேற்றினை அடையும்படிச் செய்தருள்வாய்.

நேர் - நேர்ந்த, சுணங்கு - தேமல், ஆவி - வாசனை. கிளை - முங்கில், வள்ளம் - கிண்ணம், நீலவண்டு - நீலோர்ப் பலக்கண், அங்காரம் - ஆங்காரம் இறுமாப்பு, ஆசை உயிர் சம்பையார் - திக்குகளில் வாய்விட்டு மின்னும் மின்னல்

போலும் இடையை உடையவர்கள், அம்சாலும் - அழகு நிறைந்த. போன் தோகைஅமை பாளிதம்-போன் சரிகை இட்ட முந்தானையோடு கூடிய பட்டுப் புடவை, இரு - பெருமை. ஓர்-ஒப்பற்ற, தூள் - வீபூதி, கலைதோகை - சரஸ்வதி, பாழி - பருத்த வலிய, காணமுடியோன் - போன் முடியோன் திருமால்.

வாசித்த நூல்ம தங்கள் பேசிக்கோ டாத விந்து
வாய்மைப்ர காச மேன்று நிலையாக
மாசிக்க பால மன்றில் நாசிக்கு ளோடு கின்ற
வாயுப்பி ராண னென்று மடைமாறி
யோசித்த யாரு டம்பை நேசித்து ருத லைந்து
ரோமத்து வார மேங்கும் உயிர்போக
யோகச்ச மாதி கோண்டு மோகப்ப சாசு மண்டு
லோகத்தில் மாய்வ தேன்றும் ஒழியாதோ
வீசப்ப யோதி துஞ்ச வேதக்கு லால னஞ்ச
மேலிட்ட சூர்த டிந்த கதிர்வேலா
வீரப்ர தாப பஞ்ச பாணத்தி னல்ம யங்கி
வேடிச்சி காலில் அன்று விழுவோனே
கூசிப்பு காவோ துங்க மாமற்றி காத ரிந்த
கூளப்பு ராரி தந்த சிறியோனே
கோழிப்ப தாகை கோண்ட கோலக்கு மார கண்ட
கோடைக்குள் வாழ வந்த பேருமாளே.

கோழிக்கோடி தரித்த செங்கோட்டுக் கோலக்குமரா. புராரிதந்த முருகா,:வேடிச்சி காலில் வீழும் விமலா, பிறவி நீக்கம் அருள்வாயாக. புராரி - புரம்:எரித்த சிவன், பதாகை - கோடி, வேடிச்சி - வள்ளி, குலாலன் - பிரமன்.

கலக்குங் கோதற வடிக்குஞ் சீரிய
கருப்பஞ் சாறேனும் மோழியாலே
கருத்தும் பார்வையும் உருக்கும் பாவிகள்
கடைக்கண் பார்வையில் அழியாதே

விலக்கும் போதக மேனக்கேன் றேபெற
விருப்பம் சாலவும் உடையேனுன்
வினைக்கோண் டேமனம் நினைக்குந் தீமையை
விடற்கஞ் சேலென அருள்வாயே
அலைக்கும் தானவர் குலத்தின் சேனையை
அறுக்குங் கூரிய வடிவேலா
அழைத்துன் சீரிய கழற்சேங் தாமரை
அடுக்கும் போதகம் உடையோராம்
சிலர்க்கன் றேகதி அளிக்குந் தேசிக
திருச்சேங் கோபுர வயலூரா
திதிக்கும் பார்வையின் மதிப்புண் டாகிய
திருச்சேங் கோடுறை பெருமாளே.

கரும்பினும் இனித்திடும் அருட்பார்வை திகழச் சேங் கோட்டுறைந்திடும் கந்தா, நின் சீரடிச் சேந்தாமரையிணைகளைப் பொருத்தித் தரித்திடும் சிலர்க்கு அன்றே நற்கதி அளித்திடும் பரமகுருதேசிகா, வினையோடு மனம் நினையும் தீமைகளும் அகல அடியேனை அஞ்சலேன அருள்வாயே.

துஞ்சு கோட்டிச் சுழற்கண் காட்டிக்
கோங்கை நோக்கப் பலர்க்குங் காட்டிக்
கோண்ட ணுப்பித் துலக்கஞ் சீர்த்துத் திரிமானுர்
தோண்டை வாய்ப்போற் கருப்பஞ் சாற்றைத்
தந்து சேர்த்துக் கலக்கும் தூர்த்தத்
துன்ப வாழ்க்கைத் தோழிற்பண் டாட்டத் துழலாதே
கஞ்சம் வாய்த்திட் டவர்க்குங் கூட்டிக்
கன்று மேய்த்திட் டவர்க்குங் கூற்றைக்
கன்ற மாய்த்திட் டவர்க்குந் தோற்றக் கிடையாநீ
கண்டு வேட்டுப் போருட்கோண் டாட்டத்
தின்ப வாக்யத் தேனக்குங் கேட்கத்
தந்து காத்துத் திருக்கண் சாத்தப் பேறுவேனோ

வஞ்ச மாய்ப்புக் கொளிக்குஞ் சூற்கைத்
துன்று சூர்ப்போட் டேழச்சென் றேட்டிப்
பண்டு வாட்குட் களிக்குந் தோட்கோத் துடையோனே
வண்டு பாட்டுற் றிசைக்குந் தோட்டத்
தண்கு ராப்போற் புரக்கும் பேற்றித்
தொண்டர் கூட்டத் திருக்குந் தோற்றத் தினையோனே
கொஞ்சு வார்த்தைக் கிளித்தண் சேற்கட்
குன்ற வேட்டிச் சியைக்கண் காட்டிக்
கொண்டு வேட்டுப் புனப்பைங் காட்டிற் புணர்வோனே
கொங்கு லாத்தித் தழைக்குங் காப்போற்
கொண்ட லாத்துச் சிறக்குங் காட்சிக்
கொங்கு நாட்டுத் திருச்செங் கோட்டுப் பெருமாளே.

கொங்குநாட்டுச் செங்கோட்டு முருகா, வேடிச்சி கணவா, தொண்டர் கூட்டத்துறையும் இறைவா, திருமால் பிரமன் பரமர்க்கும் காணக்கிடையா நீ! கண்டு விரும்பிக் கொண்ட மெய்ப்பொருள் இன்ப வாக்கியத்தினைத் துன்ப வாழ்கை நீங்க, யானும் கேட்கும்படித் திருக்கண்சாத்தி அருள்வீராக.

மந்தக் கடைக்கண் காட்டுவர்
கந்தக் குழற்பின் காட்டுவர்
மஞ்சட் பிணிப்போன் காட்டுவர் அநுராக
வஞ்சத் திரக்கங் காட்டுவர்
நெஞ்சிற் பொருத்தங் காட்டுவர்
வண்பற் றிருப்புங் காட்டுவர் தனபாரச்
சந்தப் பொருப்புங் காட்டுவர்
உந்திச் செழிப்புங் காட்டுவர்
சங்கக் கழுத்துங் காட்டுவர் விரகாலே
ச்ண்டைப் பிணக்குங் காட்டுவர்
பண்டிட் டொடுக்கங் காட்டுவர்
தங்கட் கிரக்கங் காட்டுவே தொழிவேனோ

பந்தித் தெருக்கந் தோட்டினே
இந்துச் சடைக்கண் சூட்டுமை
பங்கிற் றகப்பன் தாள்தொழு குருநாதா
பைம்பொற் பதக்கம் பூட்டிய
அன்பற் கெதிர்க்குங் கூட்டலர்
பங்கப் படச்சென் றேட்டிய வயலூரா
கொந்திற் புனத்தின் பாட்டியல்
அந்தக் குறப்பெண் டாட்டொடு
கும்பிட் டிடக்கொண் டாட்டமொ டணைவோனே
குன்றிற் கடப்பந் தோட்டலர்
மன்றற் ப்ரசித்தங் கோட்டிய
கொங்கில் திருச்செங் கோட்டுறை பெருமாளே.

முருகா மாதரார்தம் கலவியிற்பட்டு, அவர்கட்கு இரக்கங் காட்டுவது ஒழியும்படி அருள்வாயாக.

இடம்பார்த் திடம்பார்த் திதங்கேட் டிரந்தேற்
றிணங்காப் பசிப்போங் கனல்மூழ்கி
இறுங்காற் கிறுங்காற் கிரும்பார்க் குநெஞ்சார்க்
கிரங்கார்க் கியற்றண் தமிழ்நூலின்
உடம்பாட் டுடன்பாட் டியம்பாத் தயங்காத்
துளங்காத் திடப்புன் கவிபாடி
ஒதுங்காப் பொதுங்காப் பதுங்காப் புகன்றேத்
துறும்பாற் குணக்கன் புறலாமோ
கடந்தோற் கடந்தோற் றறிந்தாட் கருந்தாட்
கணந்தாட் கணித்திண் புயமீவாய்
கரும்பொற் கரும்போர்க் குளங்காட் டிகண்டேத்
துசெங்கோட் டினிற்கும் கதிர்வேலா
அடைந்தோர்க் குணர்ந்தோர்க் களிந்தோர்க் கமைந்தோர்க்
கவிழ்ந்தோர்க் குணற்கோன் றிலதாகி

அலேந்தோர்க் குலேந்தோர்க் கினேந்தோர்க் கலந்தோர்க்
கறிந்தோர்க் களிக்கும் பெருமாளே.

உளம்நைந்து வாடி, அலேந்து அமைந்து அடைந்து அறிந்து கலந்தோர்க்கு அருளளித்தருளும் செங்கோட்டு முருகா, நேற்றிக்கண்ணன் தந்த கோற்றவேல் குமரா, இரும்புநேஞ்சர் இரக்கம் இலாக் கஞ்சப்பிரபுக்களேத் தண்டமிழால் கவிபாடி வீணுக்கு உழன்றிடாமல் காத் தருள்வாயாக.

கோவை வாயி தழுக்குந் தாக போகம் அளிக்கும்
கோதை மாதர் முலேக்குங் குறியாலும்
கோல மாலே வளேக்குந் தோளி ஞலு மணத்தங்
கோதி வாரி முடிக்குங் குழலாலும்
ஆவி கோடி அவிக்குஞ் சேலி ஞலு மயக்குண்
டாசை யாயி னுநித்தந் தளராதே
ஆசி லாத மறைக்குந் தேடொ ணுதோ ருவர்க்கோன்
ருடல் தாள்க ளேனக்கின் றருள்வாயே
சேவி லேறு நிருத்தன் தோகை பாக னளிக்குந்
த்யாக சீல குணத்தன் திருமாலும்
தேடொ ணுத பதத்தன் தீதி லாத மனத்தன்
தேயு வான நிறத்தன் புதல்வோனே
காவி டாத திருச்சேங் கோடு நாடு தனக்கும்
காவி சூழ்வ யலிக்கும் ப்ரியமாஞய்
காதி மோதி எதிர்க்குஞ் சூர ராவி கலக்குங்
கால ஞடல் தவிர்க்கும் பெருமாளே.

மாதரார்பாற்போருந்தி மயக்குண்டு ஆசையால் தளர்ச்சி உருமல் சேங்கோடா அருள்.

வருத்தங் காண நாடிய குணத்தன் பான மாதரு
மயக்கம் பூண மோதிய துரமீதே
மலக்கங் கூடி யேயின உயிர்க்குஞ் சேத மாகிய
மரிக்கும் பேர்க ளோடுற வணியாதே
பொருத்தும் பாவ நீடிய மலத்தின் தீமை கூடிய
பிறப்புந் தீர வேயுன திருதாளே
பெறத்தந் தாள வேயுயர் சுவர்க்கஞ் சேர வேயருள்
பெலத்தின் கூர்மை யானது மொழிவாயே
இரத்தம் பாய மேனிக ளூரத்துஞ் சாடி வேல்கொடு
எதிர்த்துஞ் சூரர் மாளவே பொரும்வேலா
இசைக்குந் தாள மேளமே தனத்தந் தான தானன
எனத்திண் கூளி கோடிகள் புடைசூழத்
திருத்தன் பாக வேயொரு மயிற்கொண் டாடி யேபுகழ்
செழித்தன் பாக வீறிய பெருவாழ்வே
திரட்சங் கோடை வாவிகள் மிகுத்துங் காவி சூழ்தரு
திருச்செங் கோடு மேவிய பெருமாளே.

செங்கோடு மேவிய வாழ்வே, முருகா, ஆணவாதி மலங்களின் நீங்கிச் சுவர்க்கம்சேரப் பலமுடைய அருள் மொழி அருளி இறப்போடு பிறப்பும் இலதாக உன் தாளிணை களைப் பெறத்தந்து ஆண்டிடுவாய்.

பொன்ற லைப்பொய்க் கும்பி றப்பைத்
தும்ப றுத்திட் டின்று நிற்கப்
புந்தி யிற்சற் றுங்கு றிக்கைக் கறியாமே
பொங்கி முக்கிச் சங்கை பற்றிச்
சிங்கி யொத்தச் சங்க டத்துப்
புண்ப டைத்துக் கஞ்ச மைக்கட் கொடியார்மேல்
துன்று மிச்சைப் பண்ட னுக்குப்
பண்ப ளித்துச் சம்ப்ர மித்துத்
தும்பி பட்சிக் கும்ப்ர சச்செய்ப் பதிமீதே

தொண்டு பட்டுத் தெண்ட னிட்டுக்
கண்டு பற்றத் தண்டை வர்க்கத்
துங்க ரத்தப் பங்க யத்தைத் தருவாயே
குன்றெ டுத்துப் பந்த டித்துக்
கண்சி வத்துச் சங்க ரித்துக்
கொண்ட லோத்திட் டிந்த்ர னுக்கிச் சுரலோகா
கொம்பு குத்திச் சம்ப முத்தித்
திண்ட லத்திற் றண்டு வெற்பைக்
கொண்ட முத்திச் சண்டை இட்டுப் பொரும்வேழம்
சென்று ரித்துச் சுந்த ரிக்கச்
சந்த விர்த்துக் கண்சு கித்துச்
சிந்தை யுட்பற் றின்றி ரித்தக் களிகூரும்
செண்ப கத்துச் சம்பு வுக்குத்
தொம்ப தத்துப் பண்பு ரைத்துச்
செங்கு வட்டில் தங்கு சொக்கப் பெருமாளே,

செங்கோட்டில் தங்கிடும் சொக்கப்பெருமாளே. முருகா தொண்டுசெய்து வணங்கிக் கண்டுபற்றி இன்புற நின் தண்டை அணிந்த பாதபங்கயங்களைத் தருவாயே.

ஏரு னுலே நீருய் மாயா வேளே வாசக் கணையாலே
ஏயா வேயா மாயா வேயா லாமே ழோசைத் துளையாலே
மாரு யூரு யீருய் மாலாய் வாடா மானைக் கழியாதே
வாராய்பாராய்சேரா யானல் வாடாநீபத் தொடைதாராய்
சீரு வீரு ஈரேழ் பார்சூழ் சீரார் தோகைக் குமரேசா
தேவா சாவா மூவா நாதா தீரா கோடைப் பதியோனே
வேருய் மாரு யாரு மாசூர் வேர்போய் வீழப் பொருதோனே
வேதா போதா வேலா பாலா வீரா வீரப் பெருமாளே.

இது தலைவிக்கூற்று. எம் பாலகுமாரா. உனையே நினைந்து நையும் இம்மானை மனந்தேறும்படிக் கடைக்கணித்து நீ அணியும் நீபமலர்மாலையாவது தந்தருள்வாயாக.

ஞால மேங்கும் வளைத்தாற்று கடலாலே
நாளும் வஞ்சி யருற்றுரைக்கும் வசையாலே
ஆல முந்து மதித்தழற்கும் அழியாதே
ஆறி ரண்டு புயத்தணைக்க வருவாயே
கோல மொன்று குறத்தியைத்த ழுவுமார்பா
கோடை யம்ப தியுற்றுநிற்கு மயில்வீரா
கால னஞ்ச வரைத்துளைத்த முதல்வானோர்
கால்வி லங்கு களைத்தறித்த பெருமாளே.

தேவர் சிறைமீட்ட செல்வா, வள்ளிபங்கா, கோடைக் குமரா இப்பிறவியில் மாதர்வசமுற்று அழியாமல் நினது பன்னிரண்டு திருக்கரங்கள்கொண்டு ஏந்திப், புயத்தணைத்து குழந்தை எனைக் காத்தருள்வாயாக.

தோழமை கொண்டுச லஞ்செய் குண்டர்கள்
ஓதிய நன்றிம றந்த குண்டர்கள்
சூழ்விர தங்கள் கடிந்த குண்டர்கள் பெரியோரைத்
தூஷண நிந்தைப கர்ந்த குண்டர்கள்
ஈவது கண்டுத கைந்த குண்டர்கள்
சூளுற வென்பதொ ழிந்த குண்டர்கள் தொலையாமல்
வாழநி னைந்துவ ருந்து குண்டர்கள்
நீதிய றங்கள்சி தைந்த குண்டர்கள்
மானஅ கந்தைமி குந்த குண்டர்கள் வலையாலே
மாயையில் நின்றுவ ருந்து குண்டர்கள்
தேவர்கள் சொம்கள்க வர்ந்த குண்டர்கள்
வாதைந மன்றன்வ ருந்தி டுங்குழி விழுவாரே
ஏழும ரங்களும் வன்கு ரங்கெனும்
வாலியு மம்பர மும்ப ரம்பரை
ராவண னுஞ்சது ரங்க லங்கையும் அடைவேமுன்

ஈடழி யும்படி சந்த்ர னுஞ்சிவ
சூரிய னுஞ்சுர ரும்ப தம்பெற
ராமச ரந்தோடு புங்க வன்திரு மருகோனே
கோழிசி லம்பந லம்ப யின்றக
லாப நடஞ்செய மஞ்சு தங்கிய
கோபுர மேங்கும்வி ளங்கு மங்கல வயலூரா
கோமள அண்டர்கள் தொண்டர் மண்டலர்
வேலனெ னும்பெய ரன்பு டன்புகழ்
கோடை எனும்பதி வந்த இந்திரர் பெருமாளே.

அண்டர்கள் தொண்டர்கள் உலகர் யாவரும் புகழ்ந்திடும் செங்கோடை மகிழ்வேலவா, இலங்கையை அழித்த இராமரின் மருகா! தோழமைக்குத் துன்பம் விளைத்தோர், ஓதுவித்த நன்றி மறந்தோர், விரதங்களைச் சினந்தோர், பெரியோரைத் தூஷித்தோர், ஈவது விலக்கினோர், சபதம் மறந்தோர், அறம் அறியாதார், அகம்பாவமிகுத்தோர், மாதரார் வலையிற்பட்டு வருந்துவோர், தேவர்களின் சோத்துக்களைத் திருடியவர், இவர்கள் இயமதூதர்களால் அலைப்புண்டு மீளாநரகிடை வீழ்வர், என்றும் மாளா இன்பம் அருளும் உன் பெயர்கொண்டு நாவாரப் புகழ்தல், உன் அடிபணிதல், பயனுறுதல் அன்றோ இப்பிறவியாற் பெறுபயன்.

சோம் – சோத்து.

தோடப் பாமற் றேய்தப் பாணிச்
சூழ்துற் றார்துற் றழுவாரும்
தூரப் போகக் கோரப் பாரச்
சூலப் பாசச் சமனும்
பாடைக் கூடத் தீயிற் றேறிப்
பாழ்பட் டேபட் டழியாதே
பாசத் தேனைத் தேசுற் றார்போற்
பாதத் தேவைத் தருள்வாயே

ஆடற் சூர்கெட் டோடத் தோயத்
தாரச் சீறிப் போரும்வேலா
ஆனைச் சேனைக் கானிற் றேனுக்
காரத் தாரைத் தரும்வீரா
கூடற் பாடிக் கோவைப் பாவைக்
கூடப் பாடித் திரிவோனே
கோலச் சாலிச் சோலைச் சீலக்
கோடைத் தேவப் பெருமாளே.

பாசவலைப்பட்டு உற்றூர் உறவர் வருந்த வீணே இறந்துபடாமல் உன் திருவருள் விளக்கம்பெற்றவர் திருவடியில் என்னை உற்றிட வைத்தருள்வாய் முருகா.

தோயம் - சமுத்திரம், கூடல்பாடி - மதுரைநகர்.

ஆல காலப டப்பைமடப்பியர்
ஈரும் வாளென வேற்றிவி ழிச்சியர்
யாவ ராயினும் நத்திய ழைப்பவர் தெருவூடே
ஆடி ஆடிந டப்பதோர் பிச்சியர்
பேசி யாசைகோ டுத்துமருட்டிகள்
ஆசை வீசிய ணைக்குமு லைச்சியர் பலருடே
மாலை ஒதிவி ரித்துமு டிப்பவர்
சேலை தாழநெ கிழ்த்தரை சுற்றிகள்
வாசம் வீசும ணத்தில்மி னுக்கிகள் உறவாலே
மாயை ஊடுவி ழுத்திய ழுத்திகள்
காம போகம்வி ளைத்தப ரத்தையர்
வாழ்வின் மேவிம லச்சன னத்தினில் உழல்வேனோ
மேலை வானொரு ரைத்தச ரற்கொரு
பால னாகவு தித்தோர்மு னிக்கொரு
வேள்வி காவல்ந டத்திய கற்குரு அடியாலே

மேவி யேமிதி லேச்சிலே சேற்றுமின்
மாது தோள் தழு விப்பதி புக்கிட
வேறு தாயட விக்குள்வி டுத்தபி னவனேடே
ஞால மாதோடு புக்கவ னத்தினில்
வாழும் வாலிப டக்கண தோட்டவன்
நாடி ராவண னேக்கோலும் அச்சுதன் மருகோனே
ஞான தேசிக சற்குரு உத்தம
வேல வாநேரு வைப்பதி வித்தக
நாக மாமலே சோற்பேற நிற்பதோர் பேருமாளே.

நாகமாமலே மேவும் வேலவா, ஆணவாதி மலங்களாற் கட்டுண்டு மீண்டும் மீண்டும் இப்பிறவியுற்று உழலாமல் உன்னேப் பணிகின்ற நல்வாழ்வினே அருள்வாயாக.

தசாதற்கோரு என்பது - தசாற்கு என்று ஆயது' அகற்கு உரு அடியாலே மேவி - (அகலிகை) கல்லே மிதித்து உருவேய்தும்படிச்செய்து. சிலேசேற்று - வில்முறித்து, பின்னவன் - இலக்குமணன். நாகமலே - சேங்கோடு.

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் போருளானே நாககிரிப் பேருமாளே.

நாககிரிக்குமரா, மாதவரைப் பிரியாத மால்மருகா, இயமவாதனேயோடு பிறப்பு நீங்கிட ஞானம் பேற அருள் வாயாக.

அத்த வேட்கைப் பற்றி நோக்கத்
தத்தை மார்க்குத் தமராயன்
பற்ற கூட்டத் திற்ப ராக்குற்
றச்சு தோட்பற் றியவோடும்

சித்த மீட்டுப் போய்த்த வாழ்க்கைச்
சிக்கை நீக்கித் திணிதாய
சித்ர வாக்குப் பேற்று வாழ்த்திச்
சேச்சை சாத்தப் பெறுவேனே
கோத்து நூற்றுப் பத்து நாட்டக்
கோற்ற வேத்துக் கரசாய
குக்கு டாத்தச் சர்ப்ப கோத்ரக்
கோற்ற வேற்கைக் குமரேசா
தத்வ நாற்பத் தேட்டு நாற்பத்
தேட்டு மேற்றுத் திடமேவும்
தர்க்க சாத்ரத் தக்க மார்க்கச்
சத்ய வாக்யப் பேருமாளே.

முருகா போய்வாழ்விற் சிக்கினை நீக்கி அழகாய வாக்கினாலே உனை வாழ்த்திப் பாமாலை சாத்திப் பணிந்திட அருள்வாயே.

சர்ப்பகோத்ரம் - நாகமலை.

பத்தர்க ணப்ரிய நிர்த்தந டித்திடு
பட்சிந டத்திய குகபூர்வ
பச்சிம தக்ஷிண உத்தர திக்குள
பத்தர்கள் அற்புதம் எனவோதும்
சித்திர மிக்குள சத்தித ரித்ததி
ருப்புக ழைச்சிறி தடியேனைச்
சேப்பென வைத்துல கிற்பர வத்தேரி
சித்தவ நுக்ரக மறவேனே
சத்தியி லத்திவ னத்தில்மி கக்கிளி
கற்கவ ணிட்டேறி தினைகாவல்
கற்றகு றத்திநி றத்தக முத்தடி
கட்டிய ணைத்தப னிருதோளா

சத்தியை ஒக்கஇ டத்தினில் வைத்தத
கப்பனு மேச்சிட மறைநூலின்
தத்துவ தற்பர முற்றும் உணர்த்திய
சர்ப்பகி ரிச்சுரர் பெருமாளே.

சர்ப்பகிரிப் பரமகுருநாதா, உனது நடனம்கண்ட பக்தர்கள் அற்புதம்! அற்புதம்! எனப் போற்றும் ஒருவன் நீ. அடியேனை உய்யக்கொண்டு அநுக்கிரகித்துத் திருப்புகழ் கொண்டு உலகெலாம் பரவ ஆட்கொண்டு அருளியமையைச் சிறிதும் மறவேன்,

புற்புதமே னும அற்பநிலை யாத
பொய்க்குடில்கு லாவு மனையாளும்
புத்திரரும் வீடு மித்திரரு மான
புத்திசலி யாத பெருவாழ்வு
நிற்பதொரு கோடி கற்பமென மாய
நிட்டையுடன் வாழும் அடியேன்யான்
நித்தநின தாளில் வைத்ததொரு காதல்
நிற்கும்வகை ஒத நினைவாயே
சற்பகிரி நாத முத்தமிழ்வி நோத
சக்ரகதை பாணி மருகோனே
தர்க்கசமண் மூகர் மிக்ககழு வேற
வைத்தவொரு காழி மறையோனே
கற்புவழு வாது வேற்படியின் மேவு
கற்றமறை வாணர் கோடிகோவே
கைத்தஅசு ரேசர் மொய்த்தகுலகால
கற்பதரு நாடர் பெருமாளே.

சமண்மூகர்களைக் கழுவேறச்செய்த காழிமறையவனே முருகா நாடோறும் நின் திருவடி இணைகளைப் போற்றிக் காதல்கொண்டு ஓதிட நினைவுகூர்வாயாக.

புற்புதம் - நீர்க்குமிழி.

போற்சித்ரப் பச்சைப் பட்டுக்
கச்சிட்டுக் கட்டிப் பத்மப்
புட்பத்துக் கோப்பக் கற்பித் திளேஞோர்கள்

புட்பட்டுச் சேப்பத் துப்பற்
கோத்தப்போற் றித்தத் திட்பப்
போற்பிற்பேற் றுக்ரச் சக்ரத் தனமாஞர்

கற்சித்தச் சுத்தப் போய்ப்பித்
தத்திற்புக் கிட்டப் பட்டுக்
கைக்குத்திட் டிட்டுச் சுற்றித் திரியாமல்

கற்றுற்றுச் சித்திக் கைக்குச்
சித்திப்பப் பட்சத் திற்சோற்
கற்பித்தோப் பித்துக் கோற்றக் கழல்தாராய்

குற்சித்துக் கோட்டுக் கோட்டுத்
துக்கச்சத் துக்குக் குக்குக்
குக்குக்குக் குக்குக் குக்குக் கேனமாருக்

குட்சிக்குப் பக்ஷிக் கைக்குக்
கக்ஷத்திற் பட்சத் தத்தக்
கோட்டிக்சுட் டிக்கோக் ரிக்குக் குடதாரி

சற்சித்துத் தோற்புத் திப்பட்
சத்தர்க்கோப் பித்தட் சத்துச்
சத்தத்தைச் சத்திக் கோச்சைப் பதிவாழ்வே

தக்ஷப்பற் றுக்கோர்ப் பத்திற்
சோற்பற்றைச் சேற்றிட் டுச்சச்
சர்ப்பப் போற் றைக்குட் சோக்கப் பேருமாளே.

சோக்கப்பேருமாள் முருகோனே போய்யுட் போருந்தி வீணே அலையாமல் உனைப்போற்றும் வகையினைக் கற்பித்து அடியிணைகளைப்பேற அருள்வாயாக.

போற்றை - மலை. பேற்றுக்ர - பேற்ற உக்கிர, கோக்கரி- கூவிய, குக்குடம் - கோழி.

சர்ப்பப்போற்றை - நாகமாமலை.

கொடிய மறலியும் அவனது கடகமும்
மடிய வொருதின மிருபதம் வழிபடு
குதலை அடியவ னினதருள் கொடுபொரும் அமர்காணக்
குறவர் மகள்புணர் புயகிரி சமுகமும்
அறுமு கமும்வெகு நயனமும் ரவியுமிழ்
கொடியு மகிலமும் வெளிபட இருதிசை இருகாலும்
படியு நெடியன எழுபுண ரியுமுது
திகிரி திகிரியும் வருகென வருதகு
பவுரி வருமொரு மரகத துரகத மிசையேறிப்
பழைய அடியவ ருடனிமை யவர்கணம்
இருபு டையுமிகு தமிழ்கொடு மறைகொடு
பரவ வருமதி லருணையில் ஒருவிசை வரவேணும்
சடில தரவிட தரபணி தரதர
பரசு தரசசி தரசுசி தரவித
தமரு கமிருக தரவனி தரசிர தரபாரத்
தரணி தரதனு தரவெகு முககுல
தடினி தரசிவ சுதகுண தரபணி
சயில விதரண தருபுர சதிதரு மயில்வாழ்வே
நெடிய உடலுரு இருளெழ நிலவெழ
எயிறு சுழல்விழி தழலெழ எழுகிரி
நெரிய அதிர்குரல் புகையெழ இடியெழ நெடுவானும்
நிலனும் வெருவர வருநிசி சரர்தள
நிகில சகலமு மடியவொர் படைதொடு
நிருப குருபர சுரபதி பரவிய பெருமாளே.

முருகா நீ! ஆறுமுகமும் பன்னிரண்டுதோளும் திகழ மயில் மிசைஏறிப் பழஅடியார்களோடு புடைசூழ்ந்த இமையோர் கூட்டங்களும், தமிழொடுமறைகள்கொண்டு பரவி ஏத்திட என் முன்னே தோன்றி வந்தருளவேணும்.

திகிரிதிகிரி - சக்ரவாளகிரி.

க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் 1

போன்னிலகு பாட்தமும் அம்போற் சிலம்பும்
புனைந்தபோற் சேவடிகளும்
புலியினதள் நீள்கலை இரண்டுபரி வட்டம்
போருந்தத் தரித்தஇடையும்
உன்னமுகை கேட்டுடன் பாலோழுகும் ஒருதனமும்
உமைவளை அழுந்துமார்பும்
உரககங் கணம்இலகு சேங்கையும் சேம்போன்வளை
உற்றசேங் கையிணைகளும்
அன்னைதன் இடப்புறம் பார்த்தருளும் ஒருவிழியும்
அங்கயற்கண் ஒன்றும்விண்
ஆறுதரு சேஞ்சடையும் நீள்கருங் குழலும்நிறை
அம்மையுடன் அப்பனுகும்
தன்னிகரி லாஅர்த்த நாரீசன் மைந்தனே
சப்பாணி கோட்டியருளே
சங்காழி மால்மருக சேங்கோடு மகிழ்முருக
சப்பாணி கோட்டியருளே.

— சிதம்பரமுனிவர்.

ஆறிருதடம் தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வேற்பைக்
கூறுசேய்தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க சேவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியாரேல்லாம்.

திருச்சிற்றம்பலம்

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

சமய விளக்கத் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருவது. கடவுள் உணர்ச்சி ஊட்டும் கவிதை கட்டுரை கதைகள், இலக்கிய இலக்கண ஆராய்ச்சி விரிவுரைகள், அறிவியற் கட்டுரைகள், பிற மொழி பெயர்த்துத் தமிழாக்கந் தரும் கட்டுரைகள், எதிர் காலம் முதலியவற்றிற்கும் இருப்பிடம். சந்தாத் தொகையைக் கீழ்க்கண்டமுகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 1—50 வெளிநாடு ரூ. 2—00

செயலாளர்,

" ஞானசம்பந்தம் " காரியாலயம்,
தருமபுர ஆதீனம், மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.